ஆங்கிலத்துறைத்தலைவர் திருமதி. **ரெங்கநாயகி** வரவேற்புரை நிகழ்த்துகிறார்



சிறப்பு விருந்தினர் மகளிர்தின சிறப்புரையாற்றுகிறார்



Final year B.Sc., Chemistry Batch.



Farewell to retiring Staff Members

| | | | |
|---|---|---|---|
| Sitting: | 3rd from left | Prof. | **N. Padmanabhan** |
| | 4th from left | Prof. | **S. Pattabiraman.** |
| | 7th from left | Prof. | **C.R. Natarajan.** |
| | 8th from left | Prof. | **J.S. Francis.** |

# SRI PARAMAKALYANI COLLEGE, ALWARKURICHI.

## *A Report on Youth Affairs 2000—2001*

It gives us immense pleasure in giving a report on the youth activities of the College during the academic year 2000—2001.

I and Mrs. Sasikala, Lecturer, Department of Maths took over as co-ordinators of the youth activities from June 2000.

The students of our college participated with great enthusiasm and have achieved laurels in many inter collegiate competitions.

Meenakshi Sundaram of II B.Sc. Chemistry participated in the Rotalent Competition conducted by the Rotary Club of Tirunelveli. He secured the first prize in Rangoli at the Youth Festival. He got the second prize in the same event conducted by St. Xavier's College under the name 'Sabtham 2000'. In the same competition he secured the second prize in miming. In the cultural festival conducted by CSC Computer Academy, he stood first in Painting and Rangoli. In the 'Rotnival 2000' at Sivakasi, he stood third in Rangoli. He also participated in Chemsip 2000.

Mayil Raghavan of III B.Sc. Maths. stood second in miming at 'Sabtham 2000' and got the first prize in dance in the same competition. He participated well in Youth Fest, Rotnivel and Rotalent.

Senthilvel Rajan of II B.Sc. Chemistry stood second in Puthu Kavithai at the 'Sabtham 2000'. He participated enthusiastically in Youth Fest, Rotnivel and Rotalent.

Lakshmi Narasimhan of II B.Sc. Physics stood third in the Youth Festival's Photography event and came third in Rangoli at 'Sabtham 2000'. He participated in 'Rotnivel 2000'.

Sivakumar of I B.Sc. Chemistry got a consolation prize in the eloqution competition at APC Mahalakshmi College, Tuticorin.

Eashwar of III B.Sc. Physics stood III in Haiku writing at the 'Rotalent'. He secured the third place in an oratorical competition held at Sathakathulla Appa College.

Venkatesh of III B.Sc. Chemistry got the third prize along with Ramji Krishnan of the same class in Quiz at the Youth Festival Quiz Competition. He performed well at the Quiz competitions held at Virudhunagar and Tenkasi.

Ramji Krishnan secured the first place at the 'Chem Speed' competition held at Virudhunagar.

Ari Ramar of II B.Sc. Maths. received the first prize in an oratorical contest conducted by 'The Thamiraparani Iyakkam'.

Ramalakshmi of II B.Sc. Maths. got the first prize in an essay writing contest conducted by the government. She received the prize from the District Collector, Tirunelveli.

Ganesan of I B.Sc. Chemistry, Arul Selvan of II B Sc. Maths. and Marimuthu of III B.Com. wrote the exam and got selected for a four day training camp conducted by the Vivekananda Kendra, Kanyakumari.

Sathya Kailash of III B.Sc. Chemistry got the first place in the instrumental solo in the Youth Festival. At 'Sabtham 2000' also, he got the first prize in the instrumental solo.

Vasavinithya of II B.Com. got the third prize at the 'Rotnival' in Vocal Light Solo. She got the first prize by singing Sri Thiyagaraja Keerthanas at Ambai Rotary Club.

Sumathi of III B.Sc. Physics got the third prize in Rangoli at the Rotalent Competition. She performed well in the Rotnival, Rotalent, Youth Fest and other competitions. Recently, she got the first prize in the Youth Festival conducted by M.S.U., in the classical dance event.

Bindhuja of II B Sc, Physics Participated on behalf of the college in many competitions.

Shanmugasundari of III B.Sc. Maths participated in 'Tirukkural Vizha' held at Pettai. She also participated in an Essay writing competition. Kolappodi and handwriting competition and got certificates of merit.

R. Vallinayagam and Helan Beulah Santhi of III B.Sc. Maths and II B. Sc. Physics respectively, participated in an eloqution competition conducted by Dr. S. A. Raja Narpani Mandram.

Meenakshi and Rajeswari of II B. Sc. Physics and Shylaja of II Maths participated in an essay writing competition. L. Alamelu of II Maths participated in the poetry writing competition in the same competition.

Ganesamoorthy of II B. Sc. Physics got the first prize in an eloqution conducted by Thiruvalluvar Kalagam, Alwarkurichi.

T. Ariramar, P. Rajalakshmi and R Shylaja, all belonging to II B.Sc. Maths. and R. Vallinayagam of III B.Sc. Maths Partic pated in an eloqution competition. In this R. Shylaja got the 3rd prize.

K. Renuga Devi of I M Sc Chemistry participated in a music competition conducted by the Tamilan Kalaikudam of Raj T. V.

T. Subramanian of III B.Sc. chemistry got the First prize in an essay writing competition conducted by St. Xavier's College Palayamkottai.

Jeyavani and D. Balasubramanian of M.Sc. Physics stood first in a Quiz Competition conducted by Union Computers, Tenkasi.

Sivakumar, Muthu Bala, Sri Lakshmi, Helan Beulah, Prema, Nallathai Vasavinithya gave a variety entertainment programme for AIR Tirunelveli. The programme will be broadeasted in the month of April.

We are determined to work more and bring more laurels to the college.

We invoke the blessings of Goddess Paramakalyani and Lord Sailapathy in this regard.

**Mrs. SASIKALA**
Youth Affairs Coordinator

**Dr. C. RAJU**, M A, Ph.D.
Youth Affairs Coordinator



# The Strength of A Man

**K. Gayathri,**
II B.Sc., Physics

The strength of a man isn't seen in the width of his shoulders.
It's seen in the width of his arms that circle you.
The strength of a man isn't in the deep tone of his voice.
It is in the gentle words he whispers.
The strength of a man isn't how many buddies he has.
It's how good a buddy he is with his or "your" children.
The strength of a man isn't in how respected he is at work.
It's in how he is respected at home.
The strength of a man isn't in how hard he hits.
It's in how tender he touches.
The strength of a man isn't in the hair on his chest.
It's in his heart........that lies within his chest.
The strength of a man isn't in how many women he's loved.
It's in how true he can be to the ONE Women he's trying to love.
The strength of a man isn't in the weight he can lift.
It's in the burdens he can carry.
The strength of a man isn't in how much food he eats from your table.
It's in the effort he puts forth when you are unable.

# ஏ. என். எஸ். வழங்கிய சர்டிபிகேட்

கீழாம்பூர் சங்கரசுப்பிரமணியன்

திருநெல்வேலி ஜில்லா சுதந்திரப் போராட்டத் தியாகிகளையும், சிறந்த பத்திரிகையாளர்களையும் உருவாக்கிய ஜில்லா என்ற இரட்டைப் பெருமை கொண்ட ஜில்லாவாகும். தினமணி பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் ஆ. நா. சிவராமன் (ஏ. என். எஸ்.) சிறந்த தேச பக்தர். பத்திரிகையுலகின் பிதாமகர். இவருடைய பெயருக்கு முன்னால் இருக்கும் 'ஆ' என்ற குறிக்கு (இன்ஷியல்) என்ன அர்த்தம்? சிவராமனை ஆம்பூர்காரராகவும் கருதலாம். ஆழ்வார்குறிச்சிக்காரராகவும் கருதலாம். ஆம்பூர்தான் இவருடைய சொந்த ஊர் என்றாலும் தத்துப்போனது ஆழ்வார்குறிச்சிக்கு ஆம்பூர் வருவாய்த் துறையினரின் வசதிக்காக (Revenue Purpose) ரெயில்வே தண்டவாளத்திற்கு மேல்புறம் மேலாம்பூர் என்றும் கீழ்புறம் கீழாம்பூர் என்றும் வழங்கப்படுவது வழக்கம். அந்தக் காலத்து மக்கள் பொதுவாக ஆம்பூர் என்று தான் வழங்கி வந்தார்கள்.

ஆம்பூர், ஆழ்வார்குறிச்சி இரண்டு ஊரின் மீதும் சிவராமனுக்கு அளவு கடந்த பிரியம் உண்டு. ஆழ்வார்குறிச்சி சைலபதி பள்ளியில் ஆரம்ப வகுப்புகளைப் படித்தவர். ஆம்பூரில் வடக்குத் தெருவில் இவர் முன்னோர்களுக்கு ஒரு வீடு இருந்தது. சிவராமன் பெயரில் ஒண்ணேகால் ஈக்கர் நிலமும் இருந்தது. ஒண்ணேகால் ஏக்கர் பேர் வழி என்ற புனைப் பெயரில் இவர் எழுதுவதற்கு காரணம் ஆம்பூர் நிலங்கள் தான்.

23 மொழிகளை சிவராமன் அறிந்து வைத்திருந்தார் என்றால் அது அசுர சாதனை. கடைசியாக அவர் படித்த மொழி அரபு மொழி. இந்த மொழியில் தான் குரானைப் படித்தார். ஏ.என். சிவராமனுக்கு நான்கு வேதங்களும் தலைகீழாகத் தெரியும். இப்படி நான்கு வேதங்களையும் தெரிந்தவர்களைச் 'சதுர்வேதி' என்று அழைப்பார்கள். ஆனால் சிவராமனோ தன்னை 'அரை குறை வேதியன்' என்றே அழைத்துக்கொண்டார். அந்தப் புனைபெயரிலேயே வேத சம்பந்தமான கட்டுரைகளையும் எழுதினார். கணக்கன், குமாஸ்தா இவைகள் ஏ. என். எஸ். அவர்களின் பிரபலமான புனைப்பெயர்கள். பொருளாதார சம்பந்தமான கட்டுரைகளை எழுதும் போது இப்பெயர்களைப் பயன்படுத்திக் கொள்வார்.

நெல்லை ஹிண்டு காலேஜில் இண்டர் மீடியேட் முதலாமாண்டு வரைதான் படிப்பு. அப்புறம் படிப்புக்கு முழுக்குப் போட்டு விட்டுச் சுதந்திரப் போராட்டத்தில் குதித்தார். திலகருடைய மரணம் இவரைப் பெரிதும் பாதித்தது. காந்திஜி ஒத்துழையாமை இயக்கம் தொடங்கிய போது கல்லூரியில் தன் முதல்வரிடம் சொல்லிக் கொண்டு விடுதலைப் போரில் பங்குகொள்ளத் தயாரானார். அப்போதைய முதல்வர் பெயர் கே.ஸி. போஸ்.

''கணக்கில் நீ என்ன மார்க் வாங்குகிறாய்?'' இது முதல்வர் கேட்ட கேள்வி. ''நூற்றுக்கு நூறு மார்க் தான் ஆசிரியர் போடுகிறார். ஆனால் நான் இரு நூறு மார்க்குகளுக்கு (Choice கேள்விகளுக்கும் விடையளித்து விடுவார் ஏ.என்.எஸ்.) விடை

எழுதுகிறேன்'' இது சிவராமன் சொன்ன பதில். ''நல்லாப் படிக்கிற உன்னை எப்படி இந்துக் கல்லூரி இழக்கும். சுதந்திரப் போரில் கலந்துகொண்டால் உன்னை ஜெயிலில் போடுவார்கள்? சிரமப்படுத்துவார்கள்? நீ எதிர்பார்க்கிற சுதந்திரம் உடனே கிடைத்துடுமா? கேள்விகளை அடுக்கினார் முதல்வர். ''இன்னிக்குச் சுதந்திரம் கிடைக்குமா? நாளைக்குக் கிடைக்குமா? இதெல்லாம் எனக்குத் தெரியாது. என்றோ ஒரு நாள் கிடைக்க வேண்டிய சுதந்திரத்திற்கு இன்றிலிருந்து காந்திஜி தலைமையில் வேலை செய்ய ஆசைப்படுகிறேன்.''

இப்படி ஏ.என்.எஸ். சொன்னதும், ''படிப்பை கல்லறைக்குப் போகும் வரை நிறுத்தக்கூடாது'' என்ற சத்தியத்தை வாங்கிக்கொண்டு கல்லூரியைவிட்டு வெளியேற அனுமதி தந்தார் முதல்வர் போஸ் என்று சொல்லும் சிவராமன் இறக்கும் வரை படிப்பதை நிறுத்தவில்லை. தினசரி 8 மணி நேரம் முதல் 10 மணி நேரம் வரை புரிந்து படிப்பார்.

இளைஞர்களுக்கு ஏன் மகளிருக்கும் படிப்பு அவசியம் என்பது அவர் எண்ணம். தன்னுடைய வாசகர்களைத் தரமானவர்களாகவும் அனைத்து விஷயங்களையும் தெரிந்துகொள்பவர்களாகவும் இருக்கும்படி செய்தவர். இளைஞர்கள் அரசியலில் சேருவதில் அவருக்கு உடன்பாடு இல்லை. படிப்பு தேசபக்தி இரண்டும் இரண்டு கண்கள் என்பார்.

கல்லிடைக்குறிச்சி சங்கரய்யர், யக்ஞேஸ்வர சர்மா, கோமதி சங்கர தீட்சதர் இவர்களெல்லாம் இவருக்கு குரு. தினமணி ஆரம்பமான போது டி. எஸ். சொக்க லிங்கத்துடன் அதன் துணை ஆசிரியராகி சொக்கலிங்கம் தினமணியை விட்டவுடன் அதன் ஆசிரியராக சுமார் 53 ஆண்டுகள் தினமணியில் தொடர்ந்து ஆசிரியர் பொறுப்பில் இருந்தார். தினமணி சிவராமன் என்றும் இவரை அழைப்பதுண்டு. ஆம்பூர்காரர்கள் இவரை அழைப்பது ராமையா என்ற செல்ல பெயரில். தினமணி ராமையா, காந்தி போராட்ட ராமையா என்று அழைப்பார்கள். எங்கள் குடும்பத்தில் இவரை மொட்டை மாமா (என்னுடைய அத்தை கோமதியம்மாள் இப்போது ஆழ்வார்குறிச்சி கல்லூரியில் பௌதீகத்துறையில் விரிவுரையாளராக இருக்கும் ஆர். சுப்பிரமணியன் தாயார்) என்று அழைப்பார். திருச்செந்தூருக்குப் போய்விட்டு வந்தவர் மொட்டை போட்டுக் கொண்டிருந்தார். அதனால் இந்தப் பெயர்.

ஆழ்வார்குறிச்சி தேர்த்திருவிழாவிற்கும், ஆம்பூர் சுவாமி அழைப்பிற்கும் இவர் தவறாமல் ஆஜராவதுண்டு. ஆழ்வார்குறிச்சியில் ஹாஸ்டலில் இவர் தங்கியிருக்கிறார் சைலத்துக்கும் (சேர்மன் ஏ. சிவசைலம்) கிருஷ்ணமூர்த்திக்கும் (வைய்ஸ் சேர்மன் ஏ. கிருஷ்ணமூர்த்திக்கும்) பெரிய மனசு. அப்பா விட்ட பணிகளைச் செவ்வனே செய்யும் புண்ணியவான்கள். சைலபதி பரமகல்யாணி மீது எவ்வளவு பக்தி ஸ்ரீ அனந்த ராமகிருஷ்ணனுக்கு இருந்ததோ அதேபோன்று ஏ.எஸ்.க்கும் ஏ.கே.க்கும் இருக்கிறது. சிவசைலம் கோவில் கும்பாபிஷேத்தை மிகச் சிறப்பாக நடத்திய போது ஏ. என். எஸ். வழங்கிய சர்டிபிகேட் இது.

ஸ்ரீ அனந்தராமகிருஷ்ணனின் குழந்தைகளுக்கு சிவசைலபதியிடம் தானே பக்தி இருக்க வேண்டும்? அவர்கள் ஆழ்வார்குறிச்சிகாரர்கள் ஆச்சே? அப்புறம் ஏன் பரமகல்யாணி மீது பக்தி? என்னைப் பார்த்து நான் அவரின் வாழ்க்கை வரலாற்றை எழுதிக்கொண்டிருக்கும் போது ஒரு நாள் கேட்டார். அனந்தராமகிருஷ்ணரின் மனைவி ஸ்ரீமதி வள்ளிக்குச் சொந்த ஊர் ஆம்பூர். ஆம்பூரில் பிறந்தவள் பரமகல்யாணி. எனவே தான் ஆம்பூர் மீதும் அவர்களுக்கு பாசம் தொடருகிறது என்றார். ஏ. சிவசைலத்தின் நிர்வாகத் திறமையையும் டாஃபேயை அவர்கள் வெற்றிகரமாக உருவாக்கியபோது நாட்டின் பொருளாதார வளத்திற்கு அவர்களின் பங்களிப்பையும் வியந்து பாராட்டி இருக்கிறார். கண்ணனுக்கு (ஏ. கிருஷ்ணமூர்த்திக்கும்) டி.வி.எஸ். காரர்களுக்கும் எப்படி தொழில்நுட்பம் தெரியுமோ அதுபோன்று தொழில்நுட்ப அறிவு உண்டு என்று வியந்து பாராட்டியிருக்கிறார். இந்த இருவரும் சேர்ந்து செய்துவரும் சமூக பணிகள் சமயப் பணிகள் இவரை வெகுவாகக் கவர்ந்தவை.

உலகத்தில் கம்ப்யூட்டர் பயன்பற்றியோ ஏன் கம்ப்யூட்டரைப் பற்றியோ தெரியாத 1966களில் கம்ப்யூட்டர் பற்றி அதன் நுணுக்கங்கள் பற்றிப் படித்து தன்னுடைய விண்வெளிக்கு அப்பால் (அப்பல்லோ பயணம்) நூலில் எழுதியுள்ளார். தமிழில் அறிவியல் கருத்துக்கள் பரவிடவேண்டும் என்பதில் முனைப்பாக இருந்தவர். இளைஞர்களுக்கு இவர் சொல்ல விரும்புவது படிப்பதை மட்டும் எந்தக் காலத்திலும் நிறுத்தி விடாதீர்கள் என்பது தான். நூல்கள் நண்பனாய் முதுமை காலத்திலும் நமக்குக் கை கொடுக்கும் என்று சொன்ன இந்தப் பத்திரிகையுலகப் பிதாமகர் ஆழ்வார்குறிச்சி-ஆம்பூர் இந்த இரண்டு ஊருக்கும் சொந்தக்காரரான இவர் மார்ச் மாதம் முதல் தேதி (2001) இறைவனடி சேர்ந்தார். தேவாரம், திவ்வியப் பிரபந்தம், திருவாசகம், நன்னூல், தொல்காப்பியம் என்று தமிழ் இலக்கியங்களையும் கரைத்துக் குடித்து ஒப்பற்ற ஞான பண்டிதனாக விளங்கிய இவர் நெல்லைச் சீமைக்குப் பெருமை தேடித் தந்த ஓர் அறிவு ஜீவி என்றால் அது மிகையல்ல!.

கட்டுரையாளர் கலைமகள் இலக்கிய மாத இதழின் இப்போதைய ஆசிரியர் ஸ்ரீ பரமகல்யாணி உயர்நிலைப் பள்ளியிலும், பரமகல்யாணி கல்லூரியிலும் படித்த பழைய மாணவர். ஏ.என். சிவராமனின் சகோதரியின் பேரன்.

## What is God?

God is **S**acrifice
God is **R**ealm
God is **I**ris

God is **P**eace
God is **A**cme
God is **R**hythm
God is **A**mity
God is **M**aster
God is **A**pathy
God is **K**ind
God is **A**utocrat
God is **L**ove
God is **Y**outh
God is **A**mbition
God is **N**ature
God is **I**nfant

God is **C**ompanion
God is **O**de
God is **L**ore
God is **L**uxury
God is **E**cstasy
God is **G**enesis
God is **E**xpert

**S. Meenakshi Sundaram**
II B.Sc., Chemistry

## Who is She?

**S**he is a
**R**eputed
**I**nstitution. She

**P**reaches
**A**ll her students in
**R**ighteous way to
**A**scend
**M**eticulously and
**A**mbitiously to reach their.

**K**ismet.
**A**lso she
**L**eads the
**Y**outh to fight
**A**gainst the
**N**asty atmosphere
**I**n this world. In

**C**onclusion, she
**O**ffers a
**L**ofty
**L**ecture to
**E**ducate the
**G**rowing children to get
**E**mployed.

**V. VENKATESH**
III B.Sc., Chemistry

# A Brief Note on R. K. Narayan

One of the best things that has happened to Indian writing in English is the arrival of R. K. Narayan as a writer. Right from his first novel, he has taken his profession seriously and thus has produced a vast amount of literary output. He has achieved world world popularity through his works. His works are so widely read that they are translated into many Eropean and Indian languages. A detached observation and a sense of irony have endeared him to the readers, Malgudi, his creation, has been equated with Thomas Hardy's casterbridge. His characters tend to grow from one novel to the other. He depicts the follies and foibles of the society in a lighter vein. He understands the human emotions and pictures his characters accordingly.

R K. Narayan was born in 1907 in Madras and his mother-tongue is Tamil. Born a Tamilian, he was brought up in Mysore where Kannada is spoken and he writes in English. Narayan finished his graduation very late-when he was 24, because he failed several times in his Intermediate. After his graduation, he worked for a while in the Mysore Secretariat and later worked as a village school for five days. But his inner urge was always for writing.

R. K. Narayan has written almost 15 novels. Apart from the novels, he has to his credit many short story collections that include Malgudi Days, Dodu and other stories, Cyclone and other stories, An Astrologer's Day and other stories. Lawley Road and other srories, A Horse and Two goats, Under the Banyan Tree and other Stories.

My Days is his autobiography and My Dateless Diary is a collection of essays on his visit to the USA.

In recognition of his immense potential and prolific writing, he has been honoured with many awards and citations. He is the recipient of the Sahitya Academy Award (1961), the Padma Bushan (1964). The National Association of Independent School Award (1965) and the British Royal Society of Literature A. C. Benson Medel (1980). He is a fellow of the American Academy and the Institute of Arts and Letters.

One should start reading his novels for pure pleasure and enjoyment. Let us hope this living writer is soon bestowed with the Nobel Prize for Literature.

**Dr. C. Raju** M.A., Ph.D. Lecturer (S.S.) in English, SPK College.

# Rashtrapathi Bhavan - A Note

Rashtrapati Bhavan is the official residence of the President of India. It was originally built for the British Viceroy who needed a place to stay when the capital of the British Empire was shifted from Calcutta to Delhi. However, the construction dragged on for several years and the viceroy could move into it only in 1929.

It was planned by two architects Edwin Lutyens and Herbest Backer. It was built at a cost of 14 Million rupees

There are 340 rooms spread over four floors. Besides the Durbar, council and Ashoka halls, it houses a library, printing press, art galleiv, a theatre and a Hall of gifts.

The President lives in a set of rooms formerly used by the vicereine's lady-in-waiting.

The vast gardens of Rashtrapathi Bhavan are known as the Mughal gardens. These gardens are not built in the Mughal Period but are laid out in Mughal style with numerous terraces, fountains and canals. Hence it is called Moghul gardens.

The gardens are thrown open to public in Febuary - March every year.

# Musings on Money

Money is round and rolls away. *Italian Proverb.*

When money speaks, truth keeps silent - *Russian Proverb.*

Money like dung does no good till it is spread British Philosopher and author *Thomas Fuller (1654-1734)*

When I was young, I thought that money was the most important thing in life; now that I'm old, I know it is. *Irish author, Oscar Wilde.*

**Dr C. Raju** M.A. Ph.D. Lecturer (S.S.) in English, SPK College.

## புவியை நடத்து ! பொதுவில் நடத்து !!

பெயர் : **தி. அரிராமர்**
வகுப்பு : பி.எஸ்.சி. கணிதம் (இரண்டாமாண்டு)
இடம் : அருணகிரி ஹோட்டல், திருநெல்வேலி.
பரிசு : முதல் இடம்
போட்டி நடத்தியவர்கள்: தாமிரபரணி கலை இலக்கிய விழாக் குழுவினர், திருநெல்வேலி.

*யாதும் ஊரே! யாவரும் கேளீர் !!* - என்றார் கணியன் பூங்குன்றனார்.

*ஒன்றே குலம் ஒருவனே தேவன்* - என்றார் திருமூலர்.

*பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்* - என்றார் திருவள்ளுவர்.

தன்னலமிக்க தடியர்களைப் பார்த்து, உலகினர் அனைவரும் என் உறவினரே என்று எண்ணிச் செயல்படுக! என கணியன் பூங்குன்றனார் அறிவுறுத்தியுள்ளார். அவர் தம் அறிவுரை அறத்தின் ஆட்சிக்கும், அதர்மத்தின் வீழ்ச்சிக்கும், தன்னலம் நீங்கவும், பிறர் நலம் ஓங்கவும், போரும் பூசலும் தீரவும் ஆற்றுப்படுத்தும் ஆற்றல் கொண்டதாகும்.

வள்ளுவர் பிறர்க்கென வாழ்பவர்களாலேயே இவ்வுலகம் நிலைபெற்றுள்ளது என்ற கருத்தினை,
*பண்புடையார் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்*
*மண்புக்கு மாய்வது மன்* - என உரைத்துள்ளார்.

விவேகானந்தர் சிகாகோ நகரில் நடந்த கூட்டத்தில் பேசும் போது, சகோதர! சகோதரிகளே! என்று கூறி கூட்டத்திலுள்ளோரை வியக்கச் செய்தார். அன்னை இந்திரா இந்துக்கள், சீக்கியர்கள் என்ற இன வேறுபாடின்றி அனைவரும் உறவினார்களாய் ஒன்றுபட்ட உள்ளத்தினராய் வாழ வேண்டும் என்பதற்காகவே தம் உயிரைத் தியாகம் செய்தார். *இரத்தம் சிந்தாதீர், வெறுப்பினை சிந்துவீர்,* என்று வேண்டுகோள் விடுத்தார்.

வாழ்வில் நலிவுற்றவர்களை எல்லாம் தம் உறவினராக எண்ணி உழைத்தார் அன்னை தெரேசா. இவர்களைப் போலவே இன்னும் பலர் புவியைப் பொதுவில் நடத்தினர்.

பாரத நாட்டைப் பற்றி பைந்தமிழ்ப் பாரதி . . .
*முப்பது கோடி முகமுடையாள் உயிர்*
*மொய்ப் புற ஒன்றுடையாள் - இவள்*
*செப்பு மொழி பதினெட்டுடையாள் எனிற்*
*சிந்தனை ஒன்றுடையாள்* - என்று பாடினார்.

பதினெட்டு மொழி பேசும் முப்பது கோடி மக்களும் இந்தியர் என்ற ஒருமைப்பாட்டுணர்வில் வாழ வேண்டும் என்பதே அவர் விருப்பம்.

*நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்*
*இமைப் பொழுதும் சோரா(து) இருத்தல்* - எனவும்,

பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேணும் எனவும், கவிதை மூலமாகவே நாட்டுக்குத் தொண்டு செய்யும் நிலையை பாரதியார் வெளியிட்டார்.

ஆனால், இன்றோ சாதி, சமய, இன வேறுபாட்டால் மக்கள் தன்னலத்திறகாகவே வாழ வேண்டும் என்று எண்ணுகிறார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பண்டைத் தமிழர் சங்கம் வைத்து தமிழ் வளர்த்தனர். இருபதாம் நூற்றாண்டுத் தமிழரோ சங்கம் வைத்துச் சாதியை வளர்க்கின்றனர்.

சாதிகள் இல்லையாடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் - என்று பாடினார் மகாகவி பாரதியார்.
பாரதியார் இன்று இருந்திருந்தால் சாதிப் பேய் தலைவிரித்தாடும் இச்சமூகத்தைப் பார்த்து,

சாதிகள் இருக்குதடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் லாபம் - என்று பாடியிருப்பாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. கவிஞர் இ.முத்துராமலிங்கம் இச்சாதிகளைப் பார்த்து,

| | | | |
|---|---|---|---|
| ஜாதிகளே | ஜாதிகளே | | |
| சமாதானப் | புற்றின் | சர்ப்ப | விரியன்களே ! |
| கலாச்சார | பூமி முகத்தில் | அனாச்சார அம்மை | வடுக்களே ! |
| குலதர்ம | பேயின் | கோரைப் | பற்களே! |
| ஜாதியச் | சர்ப்பங்களே | உமக்குச் சரியான | மவுசுதான் ! |
| காலகாலமாய் நீங்கள் | | கடித்துக் கடித்து | இந்த |
| சமூகத்தின் | ஆத்மாவே | நீலம்பாரித்துப் | போனதே . . . |
| சமுதாய | நோக்கங்களின் | ஜாதியக் | கிருமிகளே |
| கொழுத்துத் | திரியும் | உமை ஒழித்துக் | கட்ட |
| இங்கே | எந்தப் | பென்சிலின் ? | - என்று சாடுகிறார். |

புவியைப் பொதுவாய் நடத்த வேண்டுமாயின், முதலில் சாதியை ஒழிக்க வேண்டும். சாதியை ஒழிக்க குழந்தைகளின் உள்ளத்தில் ஒரே குலம் என்ற வித்தை ஊன்ற வேண்டும். ஆட்சியாளர் சாதியின் அடிப்படையில் சலுகைகள் வழங்குவதை படிப்படியாக நிறுத்தி பொருளாதார அடிப்படையில் சலுகைகள் வழங்க வேண்டும். சாதி, மதங்களின் பெயரால் கட்சிகள், கல்வி நிலையங்கள், மன்றங்கள் தொடங்குவதை தடை செய்ய வேண்டும். குலத் தொழில் என்ற நிலையினை மாற்றி, எல்லாத் தொழிலும் எல்லாரும் செய்யலாம் என்ற சூழ்நிலையினை உருவாக்க வேண்டும். கலப்புமணத் தம்பதிகட்கு அரசுப்பணியில் முன்னுரிமை வழங்கலாம். தீண்டாமையைப் பரப்புவோர், பேசுவோர், கடைப் பிடிப்போருக்கு கடுந்தண்டனை அளிக்கலாம். சாதியின் அடிப்படையில் தங்கள் தலைவரின் பிறந்தநாள் விழா கொண்டாடாமல் தடுக்க வேண்டும்.

இந்து, இஸ்லாம் சமயத்தினரிடையே பிரிவினையை ஏற்படுத்துவதற்காக 1938-ல் ஜின்னா பாகிஸ்தானுக்கான வன்முறை இயக்கத்தை தொடங்கினார். அப்போது காந்தி மக்களுக்கு நினைவூட்டினார். இரண்டு விஷயங்களுக்காக நான் என்னுடைய வாழ்க்கையை அர்ப்பணிக்கிறேன். இந்து, முஸ்லீம்களுக்கிடையேயான ஒற்றுமை மற்றும் சத்தியாக்கிரகம். அவர் தமது தோழர்களை நோக்கி, எல்லாச் சூழ்நிலைகளிலும் எல்லாக் காலத்திற்கும் இறுதிவரை இந்து, முஸ்லீம் ஒற்றுமை நமது இலட்சியமாக இருக்க வேண்டும்.

நான் இரு சமயங்களையும் இணைக்கும் சிமெண்டாக இருக்க விரும்புகிறேன். இவ்விரு சமயங்களையும் எனது இரத்தத்தைக் கொண்டு ஒட்ட விரும்புகிறேன் என்று அறிவுரை கூறினார்.

| | | | |
|---|---|---|---|
| நாவலந்தீவில் | மதங்கள் | அனைத்தும் | |
| இருக்கலாம் | இன்னும் | பெருக்கலாம் | எனினும் |
| மதங்கள் | வேறு | மக்கள் | வேறு |
| மதங்கள் | மக்களின் | மாற்றுச் | சட்டைகள் |
| இந்நில | மக்கள் | அவ்வெளிச் | சட்டையின் |
| உட்புறத் | துள்ள | மனிதரைக் | காண்க - எனவும், |

| | | |
|---|---|---|
| நாவலந்தீவினர் | எல்லாரும் | நல்லவர் |
| எல்லாரும் வீரர் | எல்லாரும் | கவிஞர் |
| இமயச் சாரலில் | ஒருவன் | இருமினான் |
| குமரி வாழ்வான் | மருந்து | கொண்டோடினான் - எனவும், பாடினார் பாவேந்தர் பாரதிதாசன். |

பண்பாட்டைப் பற்றி இஸ்லாமிய சான்றோரான ஆஸ்கார் அலி என்ஜினியர் பின்வருமாறு கூறுகிறார். திருக்குர்ஆன் மானிட ஒற்றுமையை, ஒரே போல இருக்கும் தன்மையையன்று - வற்புறுத்துகிறது. ஒரே தன்மை என்பது தெய்வீக ஞானத்துடன் இயைபுடையதன்று; ஒற்றுமையே இயைபுடையதாகும். திருக்குர்ஆனின் இவ்வரிகளின் பொருள் நற்செயல்களே மிகவும் முக்கியம் என்பதாகும். நற்செயல்களில் ஒருவருக்கொருவர் போட்டியிடுவது நல்லது. ஆனால், ஒருவரின் சமயம், பண்பாடு, கொள்கை அல்லது இனமே உயர்ந்தது என உறுதிபட உரைப்பதிலன்று.

மானிட சமத்துவம் பற்றி மார்ட்டின் லூர்தர்கிங் கூறியது; ஜார்ஜியாவின் செங்குன்றில் முன்னாள் அடிமையின் பிள்ளையும், முன்னாள் அடிமை முதலாளியின் பிள்ளையும் சகோதரத்துவம் என்று மேஜை முன்பு ஒன்றாக அமர்ந்திடுவர், என்றும், அமெரிக்க கறுப்பர் உரிமை பற்றிக் கூறுகையில், எனது நான்கு புதல்வர்களும் ஒருநாள் அவர்களது தோலின் நிறத்தால் அன்று, அவர்களது பண்புகளால் தீர்ப்பளிக்கப்படும் நாட்டில் வாழ்வார்கள் என்றும் கூறினார்.

இராமலிங்க வள்ளலார் பின்வறுமாறு பாடினார்
*வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்*
*மயில் குயில் ஆச்சுதடி - அக்கச்சி*
*மயில் குயில் ஆச்சுதடி* - என்றும்,

*சாதி சமயச் சழக்கை விட்டேன் அருட்*
*சோதியைக் கண்டேனடி - அக்கச்சி* *சோதியைக் கண்டேனடி* - என்றும் பாடினார்.

*பகுத்துண்டு பல்லுயி ரோம்புதல் நூலோர்*
*தொகுத்தவற்றுள் எல்லாந் தலை* - என்பது திருக்குறள் கூறும் மனித வாழ்க்கைத் தத்துவம்.

பாரதியார் தன்னுடைய தாய்நாட்டுப் பற்றை பல இடங்களில் போற்றி வளர்த்துள்ளார். பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே என்பது அவருடைய சித்தாந்தமாகும்.

*இந்திய நாடிது என்னுடைய நாடு*
*என்று தினந்தினம் நீயதைப் பாடு*
*சொந்தமில்லாதவர் வந்தவர் ஆள*
*தூங்கிக் கிடந்தது போன மாள . . . .* என்பது நாமக்கல் கவிஞரின் தேசியப் பாடலாகும்.

தேசிய ஒருமைப்பாடு நம்மிடையே வேண்டும் என்பதை

சிந்து நதியின் மிசை நிலவினிலே
 சேரநன் னாட்டிளம் பெண்க ளுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டி சைத்துத்
 தோணிக ளோட்டிவிளை யாடி வருவோம் - எனவும் புதிய சமுதாயத்தை உருவாக்க என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி அறிவுறுத்துகையில் . . . .

***இனியொரு விதி செய்வோம் - அதை***
***எந்நாளும் காப்போம் !***
***தனியொருவனுக்கு உணவிலை யெனில்***
***ஜகத்தினை அழித்திடுவோம்*** - என்றும் பாடினார் பாரதியார்.

வல்லரசு நாடுகள் தமது ஆயுதப் பலத்தால் பிற நாடுகளை ஒடுக்க வேண்டும் என்று எண்ணுகின்றன. இது முற்றிலும் தவறு. இவர்கள் புவியை நடத்து! பொதுவில் நடத்து!! என்ற கொள்கையுடன் செயல்பட முற்படின், உலகில் போர்ப்பயம் நீங்கி அமைதி ஓங்கும். அழிவு அகன்று ஆக்கம் சிறக்கும். கேடு நீங்கி நாடு செழிக்கும்.

உலகம் ஒன்றுபட வேண்டுமாயின் மக்கள் இதயம் பண்பட வேண்டும். குறுகிய மனப்பான்மை அகன்று பரந்த மானப்பாண்மை ஏற்படுதல் வேண்டும். வேற்றுமைகளை மறந்து விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையின் மூலம் ஒற்றுமை காண வேண்டும்.

[illegible]ம் படைத்த வல்லரசுகளை நாட்டொற்றுமைகளுக்கு வழிகாட்ட வேண்டும். விஞ்ஞான வளர்ச்சியை ஆக்கத் துறைக்கு பயன்படுத்த வேண்டும். விண்வெளி வெற்றி கண்டுவரும் இந்நாளில் ஒரு நாட்டு மக்கள் பட்டினியால் துடிக்க, மற்றொரு நாட்டினர் விலைவாசி ஏற்றத்துக்காக கோதுமையைக் கடலில் கொட்டும் இழிநிலை மாற வேண்டும்.

*காக்கை குருவி எங்கள் சாதி - மீன்*
*கடலும் மலையும் எங்கள் கூட்டம்* - என்னும் ஒற்றுமைப் பண்பு ஓங்கிட அனைவரும் உறுதி பூண்டு விட்டால் பூவியை பொதுவில் நடத்தும் நாள் சேய்மையில் இல்லை.

மாணவர்கள் இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் கண்போல், பொன்போல் போற்றிப் பாதுகாக்க வேண்டும். மாணவர்களின் உழைப்பு நீர் பாய்ந்தால்தான் ஒருமைப் பயிர்த் தழைத்து வளர முடியும். மாணவர்களின் உள்ளமாகிய வயலில் நாட்டுப்பற்றாகிய வரப்பு உயர்ந்தால்தான் ஒருமைப்பாட்டு நீர் உயரும். ஒருமை பாட்டு நீர் உயர்ந்தால் தான் நாடும், வீடும் உயரும். எனவே *இந்தியா இந்தியரின் உடைமை; அதைக் காப்பது நமது கடமை* என உணர்ந்து ஒன்றுகூடி நின்று வாழ வேண்டும்.

உலக நாடுகள் தங்களுடைய ஆற்றலை வளப்படுத்திக் கொள்ள வேண்டுமாயின் *அமைதி* என்னும் ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும். அடுத்தவருக்கும் தீமை செய்யாது நமக்கும் தீமை செய்து கொள்ளாது, எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றும் அறியேன் என்ற உயர்ந்த நோக்கத்துடன் விளங்கினால் உலகம் செழிக்கும்; உலகத்தில் அமைதி பெருகும்.

எடுப்பீர்! உறுதிமொழியை!

புவியை நடத்து !! பொதுவில் நடத்து !!

அடைவீர் வெற்றியை !!! வாழ்க வளமுடன் !!!

ஜெய்ஹிந்த் !

---

## *Coincidence*

(American Presidents)

| <u>Abraham Lincoln</u> | <u>John Kennedy</u> |
|---|---|
| Elected as President 1860 | 1960 |
| Worked for civil rights | for Negroes |

Both men were assassinated on Friday in presence of thier wives

Lost one son at White House

Killed by a bullet that entered the head from behind.

Lincolns' private secretary ***John*** John Kennedys' private secretary ***Lincoln***

Successors were Johnson

| | |
|---|---|
| Murderer fired from Theatre & ran to godown | Murderer fired from Godown & ran to theatre. |

# மதிப்பு

சிந்திவிட்ட பருக்கையின் மதிப்பு
அதை சுமந்து செல்லும் எறும்புக்குத் தெரியும்!
செங்கதிரை விதைத்திருக்கும் சூரியனின் மதிப்பு
அதை ஈர்த்துச் சுழலும் பூமிக்குத் தெரியும்!
வீணையில் எழும்பும் நாதத்தின் மதிப்பு
அதை ரசித்திடும் ரசிகர்களுக்குத் தெரியும்!
மலை உச்சியில் ஊற்றெடுக்கும் தண்ணீரின் மதிப்பு
அதை பயன்படுத்தும் உயிர்களுக்குத் தெரியும்!
பறந்து விரிந்த ஆகாயத்தின் மதிப்பு
அதில் சுழலும் கோள்களுக்குத் தெரியும்!
கல்லில் உருவான நெருப்பின் மதிப்பு
அதை வெளிக்காட்டிய மனிதனுக்குத் தெரியும்!
கண்ணால் காண இயலாத காற்றின் மதிப்பு
அதை சுவாசிக்கும் உயிருக்குத் தெரியும்!
பெருகிவிட்ட உயிர்களின் மதிப்பு
அதைத் தாங்கி சுழலும் பூமிக்குத் தெரியும்!
புதைக்கப்பட்ட புதையலின் மதிப்பு
அதைக் கண்டறியும் மனிதனுக்குத் தெரியும்!
செதுக்கி வைத்த சிலையின் மதிப்பு
அதை வணங்கும் மனிதனுக்குத் தெரியும்!
ஏற்றிவிட்ட கற்பூரத்தின் மதிப்பு
அதை கும்பிடும் பக்தனுக்குத் தெரியும்!
கட்டிவிட்ட பாலத்தின் மதிப்பு
அதைக் கடந்து செல்லும் மனிதனுக்கு தெரியும்!
கடந்துவிட்ட இளமையின் மதிப்பு
அதைக் கடந்துவரும் முதுமைக்குத் தெரியும்!
வளர்கின்ற குழந்தையின் மதிப்பு
அதை வளர்த்து வரும் அன்னைக்குத் தெரியும்!
பயில்கின்ற பாடத்தின் மதிப்பு
அதை பயின்றுவரும் மாணாக்கருக்குத் தெரியும்!
படிக்கின்ற மாணாக்கரின் மதிப்பு
பாடம் கற்றுத்தரும் ஆசிரியருக்குத் தெரியும்!
பரம்பொருளாம் இறைவனின் மதிப்பு
உலகில் யாருக்குத்தான் தெரியும்?

By,

**D. Saraswathy,**
I M.Sc., Chemistry

## நிலைமை

நிமிர்ந்து நின்றால் நேர்மை
குனிந்து நின்றால் தாழ்மை
இங்கு தான் உண்டு இந்த வேற்றுமை
இங்கு வந்துபார் இந்த
நாட்டின் நிலைமை

உனக்கும் உண்டு கடமை
புத்தியில் தேவை கூர்மை
ஏழை வயிற்றில் இருப்பது வெறுமை
எங்கும் காண்பது வறுமை
வேறு நாட்டில் காண்பது புதுமை
இங்கே உண்டோ பசுமை
பேசும் சக்தி இல்லாதவன் ஊமை
பேசமுடியாமல் தவிப்பவன் ஆமை
அனைவருக்கும் உண்டு சுமை
பதினைந்தில் தோன்றுவது இளமை
மேற்கொண்டு சென்றால் முதுமை
எல்லோருக்கும் உண்டு பெருமை
உனக்கு மட்டும் ஏன் இந்தச் சிறுமை
உன் எண்ணத்தில் உண்டோ உண்மை
உன் மனதில் உண்டு மடமை
உனக்குள் உண்டு திறமை
அதை வெளிக்காட்ட உனக்கு
இல்லை உரிமை

எப்பொழுது தீருமோ இந்த இல்லாமை
மாறட்டும் இந்த நிலைமை
பெருகட்டும் இங்கு நன்மை
பாடட்டும் பிறர் இந்நாட்டின் பெருமை!

by,
**A. Shenbagavalli,**
I M.Sc., Chemistry

## மறந்ததென்ன இளைஞனே!

மறந்ததென்ன இளைஞனே...
ஆயிரம் ஆயிரம் செலவுகள் செய்து
ஆலயம் போகும் இளைஞனே
அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஔவை சொன்னதை மறந்ததென்ன...?

கடமையை மறந்து காலையிலே
காட்சிக்கு நிற்கும் இளைஞனே...
தொல்லையைப் போக்க ஆயுதமேந்தி
எல்லையில் நிற்க மறந்ததென்ன...?

அரங்கம் நிறைந்ததை அறிந்தவுடன்
ஆவேசம் கொள்ளும் இளைஞனே ?
அதர்மம் தளைக்கும் வேளையிலே
தர்மம் காக்க மறந்ததென்ன...?

மறந்ததென்ன இளைஞனே—நீ
இளைஞன் என்பதை ..

பொ சீ...

## சுதந்திர இந்தியா...

சித்தத்தினால் மகாத்மா சிந்திய இரத்தத்தினால்
அகிம்சை யுத்தத்தினால் விடுதலை மோகத்தினால்
சுதந்திர தாகத்தினால் பெற்று விட்டோம்
ஆனந்த சுதந்திரம்!

இனி சொந்தத்தினால் தமிழை சந்தத்தினால்
இயற்கையை வசந்தத்தினால் மனதை
சாந்தத்தினால் நிறைக்கும் இந்தியனாவோம்!

மண்வயலினிலே விண்வெளியினிலே
நீர்குமிழினிலே ஓங்கி உயரும்
அறிவினிலே உயர்ந்திடும் இந்தியனாவோம்!

இனி சாதியையும், மத சேதியையும்,
அகந்தை மீதியையும் ஒழித்துவிட்டு
ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற
சோதியை ஏற்றிடுவோம்!

M. பிரியா
II Z

# பொன் மொழிகள்

1 தனக்குக் கிடைக்கிற ஊதியத்தின் மதிப்பை காட்டிலும், தன்னுடைய உழைப்பின் மூலமாக மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதனே சமுதாயத்தில் உயர முடியும்.

- ஆபிரகாம் லிங்கன்

2 அனுபவம் ஒரு கடுமையான வாத்தியார், அது சோதனையை தந்த பிறகு தான் பாடத்தை போதிக்கிறது.

- பெர்னாட்ஷா

3 யோசிப்பதானால் நிதானமாக யோசியுங்கள், செயல்படுவதானால் உறுதியோடு செயல்படுங்கள், விட்டுக்கொடுப்பது என்றால் பெருந்தன்மையோடு விட்டுக்கொடுங்கள் எதிர்த்தால் திடமாக எதிருங்கள்.

- கோல்டன்

4 வறுமையிலே நிறை காண்பவனே சிறந்த பணக்காரன். - கொரியப் பழமொழி

5 வாள் விரைவாக விரைந்து வேலை செய்ய வேண்டும். பேனா நின்று நிதானித்தே வேலை செய்ய வேண்டும்.

- ஜூலியா வார்ட்கோ

6 பெரும் அறிவாளிகள் புத்தகங்களோடு வாழ்க்கையையும் சேர்த்துப் படிக்கிறார்கள்.

- லின் யுடவ்

7 புத்தகம் படிக்கும்போது வண்டுவின் வழியைப் பின்பற்ற வேண்டும், அது மலர்களில் தேனை மட்டுமே ஊறிஞ்சும். ஆனால் தீங்கு நேராது.

- கால்ட்டன்

8 மற்றவர் கஷ்டம் என்று சொல்லுவதைச் செய்து காட்டுவதன் பெயர்தான் திறமை, திறமைசாலிகளாலேயே முடியாது என்று சொன்னதை செய்து முடிப்பவனே மேதை.

- ஏமியால்

9 தவறை ஏற்பதுதான் தன்மானத்தின் உச்சநிலை. - சிங்செள

10 ஒரு சதம் உத்வேகமும், மிதி சதம் உழைப்பும் கொண்டது தான் மேதைத்தன்மை.

- மில்டன்

11 எல்லை கடந்து சிரிப்பவன் மூடன், சிரிக்காமலே இருந்து விடுபவன் வஞ்சகன். - புல்லர்

12 புத்தகங்கள் நமக்கு வழி காட்டுவதோடு தனிமையிலே நாம் இருக்கும் போது நமக்குப் பெருந்துணையாக இருப்பதுடன் நமக்கு நாமே பெருஞ்சுமையாகத் தோன்றாதவாறு செய்கின்றன.

- கோலியர்

13 நீங்கள் சோம்பேறியாக இருந்தால் தனிமையில் இருக்க வேண்டாம். தனிமையில் இருந்தால் சோம்பேறியாக இருக்க வேண்டாம்.

- ஜான்சன்

14 முட்டாள்கள் புத்திசாலிகளின் வெற்றியைப் பின்பற்றுவதில்லை. ஆனால் புத்திசாலிகள் முட்டாள்கள் செய்யும் தவறுகளை தவிர்த்து விடுகிறார்கள். அதனால் முட்டாள்களால் புத்திசாலிகளுக்கு நல்ல பயன் கிடைக்கிறது.

- மார்கஸ் காடோ

15 சோம்பேறித்தனம் உடலின் மூடத்தனம். மூடத்தனம் மனத்தின் சோம்பேறித்தனம்.

- ஸ்யூம்

16 நாம் சந்தோஷமாக இருந்த காலத்தை நினைவுப்படுத்திக் கொள்ளும்போது ஏற்படுகிற துக்கத்தைக் காட்டிலும் கொடியது வேறில்லை.

- டான்டே

17 இளைய வயதினர் இல்லாமல் நாடு இல்லை, வயதானவர்கள் இல்லாமல் ஒரு சிறந்த நாடே இல்லை. - சிசரோ

18 மூன்று முறை முகத்தில் அடித்தால் புத்தருக்கும் கோபம் வந்தே திரும்.
- ஜப்பான் பழமொழி

19 பொறுமையை உண்டாக்குவது துன்பம், அனுபவத்தை உண்டாக்குவது பொறுமை, நம்பிக்கையை உண்டாக்குவது அனுபவம். - மிச்செல்

20 சிறப்பாகச் சொல்லப்பட்டதைக் காட்டிலும், சிறப்பாகச் செய்யப்பட்டதே சிறப்பானது.
- பிராங்க்ளின்

21 மௌனமாக இருப்பதைக் காட்டிலும் நல்லதை வெளியே சொல்லி விடுவது நல்லது. கெட்டதை வெளியே சொல்லுவதை விட மௌனமாக இருந்து விடுவது நல்லது.
- மொஹமத்

22 பேசாத வார்த்தைக்கு நீயே எஜமான் பேசிய வார்த்தை உனக்கே எஜமான்.
- ஆங்கிலப் பழமொழி

23 மனிதன் வெற்றியிலே கற்பது குறைவு, தோல்வியிலே கற்பதோ அதிகம்.
- ஜப்பானியப் பழமொழி

24 செல்வர்களின் இன்பங்கள், ஏழைகளின் கண்ணீரை விலையாகக் கொடுத்து வாங்கப் பெறுகின்றன. - இங்கிலாந்துப் பழமொழி

25 ஒவ்வொருவரும் தம்மை அதிபுத்திசாலி என்று நினைத்துக் கொள்கிறார்கள். இந்த உலகிலே இத்தனை முட்டாள்கள் இருப்பதற்கு இதுதான் காரணம்.
- ஹங்கேரியப் பழமொழி

**R. Gayathri**
II B.Sc. (Physics)

# மணி மொழிகள்

1 அன்பு ஓர் உணர்வுதான் அறிவு என்னும் வழிகாட்டி இல்லாத போது மற்ற உணர்வுகளைப் போல் அந்த அன்பும் கேடு விளைவிக்கும்.

2 மனம் மெலிவாக இருக்கும் போது, அறிவு துணைக்கே வருவது இல்லை.

3 எண்ணம் திருந்தினால் எல்லாம் திருந்தும், அதுதான் பெரிய அடிப்படை.

4 எங்கே உணர்ச்சியும் பாசமும் முந்திக் கொள்கின்றனவோ அங்கே அறிவும் திறமையும் பின்வாங்குகின்றன.

5 இந்த உலகம் கொடிய பழமைப் பித்தர்களுக்கும் இடம் தருகிறது, புதிய தலைகீழ் புரட்சியாளர்க்கு இடம் தருகிறது, நடுநிலையான உண்மையாளர்க்கு இடம் தருவதில்லை.

6 எல்லோரும் உலகத்தைத் திருத்த முயல்கிறார்கள். உள்ளத்தைத் திருத்த யாவரும் முயற்சி செய்ய முயல்வதில்லை.

7 வாழ்க்கைக்கு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பயன்படாமல் நினைவுக்குச் சுமையாக உள்ளவற்றை ஏன் தேர்வுக்கு வைத்து வற்புறுத்துகிறார்களோ?

# அன்புள்ள பூமிதாய்க்கு!

பொறுமைக்கு பெயர் போன
பொக்கிஷமே!
உன்
வயிறு வெடித்து விட்டதா?
உன்
வாய் கிழிந்து விட்டதா?
உன்
வயிற்றுக்கு பசியை
ஆற்றி கொண்டாயா?
உன்
வாய்க்கு இரையை
போட்டு விட்டாயோ?
பிள்ளைகள் தவறு
செய்வதை
பொறுத்து கொள்ளும்
தாயைக் காட்டிலும்
நீ!
முற்றிலும் வேறுபட்டவள்!
ஆம்!
இங்கு நீயே
தவறு செய்து விட்டாயே!
என்ன கேட்கிறாய்?
என்ன தண்டனை என்று தானே?
பயப்படாதே!
உன்னை விட
நாங்கள் அதிகமாக
பொறுமையைக் கற்றுக்கொண்டுள்ளோம்
உன்
வாயையும், வயிற்றையும்
தைக்க
எங்களிடம் மருத்துவர் உள்ளார்
ஆனால்
ஊசி தான் இல்லை
உனக்கு இன்னமும்
பசிக்கிறது என்றால்
எங்களிடம் முன்னமே
சொல்லி விடு!
நீயே எடுக்காதே
நாங்களே தருகிறோம்
எங்களை ......!

கண்ணீருடன்
S. ரம்யராஜம், I B.COM.

# பிரியும் நெஞ்சம்

தோழமை—வெறும்
சிறுகதையல்ல—பெரும்
தொடர்கதை—நாம்
பிரிவது காலதேவனின்
கட்டளையா? சாபமா?
தெரியவில்லை!

நம் பிரிவின் அலறல்
ஆழ்கடல் வரை பிரதிபலிக்கட்டும்
நமது கண்ணீர்த் துளியில்
பாலைவனம் நனையட்டும்!

நம் நிழல் பிரிந்தால்
நினைவுகள் செல்வதல்ல...
நம் நட்பு ஒன்றும்
அரிசிமாக் கோலம் அல்ல
எறும்புகளால் அழிப்பதற்கு!

அது
இதயத்தில் நீயும் நானும்
செதுக்கிய
தோழமைச் சிற்பம்!

கரைந்த மனதோடு
கலங்கிய கண்ணோடு
கலையாத உன் நினைவோடு
விடை தருகிறேன்!

By,
G. MUTHURAJ
I M.Sc., Physics

# ஒய்வு நேரக் கவிதை

வெ. ரெங்கநாயகி
ஆங்கிலத்துறை

(மதுரை பாத்திமா கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ் விழா கவியரங்கத்தில் வாசிக்கப்பட்ட கவிதை வரிகள். ''கதவு'' சிற்றிதழிலும் வெளியிடப்பட்டது)

கால் தடங்கள் நகர நகர
நானும் நாட்களும்
செல்ல
செல்ல

வாழ்தலின் ஒவ்வொரு நிமிஷத்திலும்
வழி பார்த்தல் இல்லை,
விழி நோக்கில் வெறுமை எல்லை.

அவசரக் கால் ஏவல்களில்
கேசாதி பாதம் பழகிவிட்டது.
கண்களின் நிலை குத்தலும்
வெற்றிடம் வெறிப்பதும்
ஏற்றுக்கொள்ளப்பட்டன.

உப்பு சுவை மறந்து
மரத்துப் போன இரத்த நாளங்களில்
தெரிவதில்லை
துல்யமான மழை நீர் ருசி.

எனக்கும் ஆசை தான்...
அடர்ந்த கொடி நிழல் கீழ்
அசை போட்டுக் கொண்டிருக்கும்
பாதித் தூக்க பசுவாகவோ
ஆடாகவோ
ஆகிவிட.

எனக்கும் இணக்கம் தான்...
கண்களில் அள்ளிக் கொள்ள
ஆகாய நியான் விளக்கு
ஆற்றில் எதிரொலித்துச்
சிதறித் தரும் நட்சத்திரங்களை...

எனக்கும் ஏக்கம் தான்...
எப்போதோ காட்டுப் பொந்திடை
ஒளித்துச் சென்ற முந்திரியை
கண்டெடுக்கும் முயல் முயற்சியில்
ஓடிவிட...

ஆதங்கம் தான் எனக்கும் அழகே...
உன்னை
ஆசு கவிகள் பலர் போல
ஆளுயரமாய் நின்று நோக்க
அடி வருடி ஆட
உன்
விழி வழி வாய் புன்னகை விகசிப்பில் மட்டுமே
உயிர் வாழ
வாழ்தலை உற்று நோக்க...

ஆயினும்,
கால்களுக்கடியில்
வாழ்தலை தொலைத்துவிட்டு
கடிகார முட்களாய்
வாழ்கிறேன் போலும்!



# எனக்குப் பிடித்தவை...

சூரியனின் சுறுசுறுப்பு
கடலின் களிப்பு
அருவிகளின் ஆர்ப்பரிப்பு
நதிகளின் நளினம்
மயில்களின் நடனம்
குயில்களின் கூற்று
அன்புள்ள அன்னை
வழிகாட்டும் தந்தை
மழலையின் மொழிகள்
மலைகளின் மகுடங்கள்
நிலாவின் குளிர்ச்சி
மலர்களின் மணங்கள்
இயற்கையின் இளமை
இவற்றிற்கு மேலாக
நண்பனின் நட்பு...

# சுவாமி விவேகானந்தரும், தேசிய ஒருமைப்பாடும்

## முன்னுரை

பாரத நாடு பழம் பெருமை மிக்க நாடு. பாருக்குள்ளே நல்ல நாடு. *யாதும் ஊரே! யாவரும் கேளிர்!* - என்ற உலக ஒருமைப்பாட்டுத் தத்துவத்தை உலகிற்கு உணர்த்திய நாடு. இம்மண்ணில் நவீன சோசலிசக் கருத்தை வரவேற்ற துறவிதான் சுவாமி விவேகானந்தர்.

## வாழ்க்கை முறை

இவர் 1863-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பிறந்து 1902-ஆம் ஆண்டு ஜுலை மாதம் மறைந்தார். ஆயினும், ஆயிரம் ஆண்டுகளில் வாழ வேண்டிய வாழ்க்கையை ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளில் வாழ்ந்து விட்டுச் சென்று விட்டார் விவேகானந்தர் - என்று ஒரு அறிஞர் கூறிய சொல் அட்சரம் லட்சம் பெறும்.

வேதாந்த தானத்தைத் தேடிக் கொண்டு சில யோகிகளைப் போல் அவர் ஆசிரமங்களில் தங்கிவிடாமல், பாரதநாடு முழுவதையும் தமது செயற்களமாகக் கொண்டு மக்களுக்குத் தொண்டாற்றினார். மனித சேவையே தெய்வ சேவை என்று முழங்கினார். இந்தியன் ஒவ்வொருவனும் விடுதலை பெற்றுத் தெய்வமாகத் திகழ வேண்டும் என்று கூறி அந்த லட்சியத்துக்காகவே வாழ்நாளெல்லாம் முழுமூச்சாக உழைத்தார்.

## விவேகானந்தரின் உயர் பண்பு

அமெரிக்கா சென்று சிக்காக்கோ சர்வ மத மாநாட்டில் பங்கு கொண்டார். பிரதிநிதிகள் எல்லோரும், சீமான்களே, சீமாட்டிகளே என்று தொடங்க, இந்தியத் துறவியாகிய விவேகானந்தர் மட்டும் கணீர் என்ற குரலில் அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே! சகோதரர்களே! என்று தொடங்கியது அமெரிக்காவையே ஒரு குலுக்கு குலுக்கிற்று.

உலகனைத்தும் ஒரே குடும்பம் என்ற மனப்பக்குவத்தைப் பாராட்டும் வகையில் அந்த இரண்டு சொற்களும் சுவாமிகளுக்கு அமெரிக்காவை வென்று தந்தன. தீரா? நீ இந்தியனாகப் பிறந்ததை அதிக கௌரவமாக நினை நான் இந்தியன், இந்தியன் ஒவ்வொருவனும் என் சகோதரன்; மூதறிவுடைய இந்தியனும் என் சகோதரன்; லட்சாதிபதியான இந்தியனும் என் சகோதரன்; பிட்சாதிபதியான இந்தியனும் என் சகோதரன்; முதற்சாதியான பிராமணனும் என் சகோதரன்; கீழ்ச்சாதியான பறையனும் என் சகோதரன் என்று பெருமையுடன் சொல்லிக் கொள், இது சுவாமி விவேகானந்தர் ஒவ்வோர் இந்தியக் குடிமகனுக்கும் போதித்த தேசீய மகா மந்திரமாகும்.

## இளைஞர்களுக்கான வேண்டுகோள்

1893-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20ம் நாள் அமெரிக்காவிலிருந்து அவர் எழுதிய ஒரு கடிதத்தில், இந்தியாவில் உள்ள பிறரும் அவ்வாறு உழைக்க வேண்டும், என்ற தம் வேட்கையை விளக்கியுள்ளார். நான் இந்த நாட்டில் குளிராலோ, பசியாலோ மடிந்து போகலாம். ஆனால், இளைஞர்களாகிய உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஏழைகளுக்காக, அறியாமை உடையவர்களுக்காக, ஒடுக்கப்பட்டவர்களுக்காக இரக்கம் கொள்ளுங்கள், போராடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிமிடமே பார்த்தசாரதி கோவிலுக்குச் செல்லுங்கள். கோகுலத்தில் ஏழ்மையும், தாழ்மையும் கொண்டிருந்த ஆயர்களுக்கு நண்பனாக இருந்த இறைவன் - வேடனாகிய குகனைத் தழுவிக் கொள்ளத் தயங்காதவன், புத்தனாக அவதரித்த போது, பிரபுக்களின் அழைப்பை விட்டு ஒரு பரத்தையின் அழைப்பை ஏற்று அவளை உய்வித்தவன். அந்த இறைவன் முன் வணங்குங்கள். நாளுக்கு நாள் தாழ்வுற்றுச் செல்லும் இந்த முப்பது கோடி மக்களின் உய்வுக்காக உங்கள் முழு வாழ்வையும் தியாகம் செய்வதாக விரதம் கொள்ளுங்கள். இவ்வாறு பிறரும் இந்தப் பேரன்பு கொண்டு பிறருடைய நல்வாழ்வுக்காக உழைக்க வேண்டும் என்று விரும்பினார்.

யாரொருவருடைய இதயத்திலிருந்து ஏழைகளுக்காக இரத்தம் வடிகிறதோ, அதாவது யார் ஏழைகளுடைய துன்பத்தை தங்களுடைய துன்பமாகக் கருதுகின்றனரோ அவர்தான் மகாத்மா . இல்லாவிட்டால் அவர் துராத்மா என்பதும் விவேகானந்தர் வாக்காகும்.

## நாட்டு மக்களின் மீது கொண்ட பற்றும், வேண்டுகோளும்

கோடிக்கணக்கான தம் நாட்டு மக்களின் இழிந்த நிலையை நினைத்து துன்புற்றார். மெத்தென்றிருந்த பஞ்சணையில் அவரால் உறங்க முடியவில்லை. தரையில் படுத்து புரண்டபடியே, தாயே! என் நாடு வறுமையில் ஆழ்ந்து கிடக்கும் போது, பெயரும் புகழும் பெறுவதைப் பற்றி நான் எவ்வாறு அக்கறை கொள்ள முடியும்? யார் என் நாட்டு மக்களைத் தூக்கி விடுவது? யார் அவர்களுக்கு உணவளிப்பது? அவர்களுக்கு எவ்வாறு நான் உதவுவது என்பதை விளக்கியருள் தாயே! என்று வருந்திக் கதறியதிலிருந்து அவரது தாய்நாட்டுப் பற்று வெளிப்படுகிறது.

கல்விச் சாலைகள், மருத்துவ மனைகள் முதலிய பல நிறுவனங்களையும் அவர் தோற்றுவித்தார். மக்களுக்குச் சேவை செய்யும்படி தமது சகோதரத் துறவிகளைப் பணித்தார். உங்களுடைய சொந்த மோட்சத்தை நாடாதீர்கள். அப்படி நாடினால் அது நரகத்திலேதான் கொண்டு சேர்க்கும். மற்றவர்களுடைய கதி மோட்சத்தையே நாடுங்கள் மற்றவர்களுக்காக உழைப்பதனால் நீங்கள் நரகத்திற்கும் போக நேரிட்டாலும் அது சொந்த மோட்சத்தைத் தேடிச் சென்று அடைவதைவிட எத்தனையோ மடங்கு உயர்ந்தது. குருமகராஜ் தாம் அவதரித்த உலகிற்காகத் தம்மை அர்ப்பணம் செய்து கொண்டார். அதுபோல நானும் என் உயிரைத் தியாகம் செய்வேன். நீங்களும் உங்கள் பணிகளை அந்த மனப்பான்மையோடு செய்ய வேண்டும். நாம் சிந்தும் இரத்தத்திலிருந்து வீர தீரம் படைத்த கடவுளின் ஊழியர்கள் ஆயிரக்கணக்காக தோன்றுவார்கள், அது உலகத்தையே மாற்றி அமைத்து விடும், இது சுவாமிஜி கூறிய வீர வசனங்களாகும்.

செயல்படு என்பதை அவர் மக்களுக்கு விடுத்த செய்தி. எல்லா நற்குணங்களுக்கும் செயலாற்றுதல் ஆணி வேர், என்பது அவரது கருத்து. செயலற்றுச் சோம்பிக் கிடப்பதை அவர் கட்டோடு வெறுத்தார். வறுமை, அறியாமை, சுரண்டல் முதலானவற்றின் மீது போர் தொடுத்து கர்ஜித்ததை, வேதாந்தமும் சொற்பொழிவும் என்ற சொற்பொழிவில் கேட்கிறோம். தனியுரிமை என்பதுதான் வாழ்வைக் கெடுக்கும் நஞ்சு என்று வலியுறுத்துகிறார்.

## நாட்டு வளர்ச்சியின் மீது கொண்ட பற்று

விவேகானந்தர் கூறினார்; உத்திதஷ்டத! ஜாக்ரத! பிராப்யவராந்நிபோ! என்று குறிப்பிட்டார். அதற்குச் சரியான மொழிபெயர்ப்பு, எழுந்திருங்கள்! விழிப்படையுங்கள்! கருதிய கருமம் கைக்கூடும் வரை ஓயாது உழையுங்கள்! என்பதாகும்.

விதவைகளின் கண்ணீரே இந்த நாட்டை இவ்வளவு கீழ்நிலைக்கு கொண்டு வந்திருக்கிறது என்பார். ஒரு சமயத்திலே, எஃகு போன்ற தசைநார்களும் மனஉறுதியும் கொண்ட துடிப்புள்ள *நூறு இளைஞர்கள் வேண்டும்* **அவர்கள்** மூலம் இந்த நாட்டைப் புத்துணர்ச்சி பெறச் செய்வேன் என்று முழங்குவார் மற்றொரு சமயத்திலே.

வறுமையால் வாடும் மக்களெல்லாம் இறைவன் வடிவங்களல்லவா? அந்தத் தரித்திர நாராயணர்க்குச் ***சேவை செய்வதே உயர்ந்த தவம்*** என்பார். சீர்திருத்தவாதிகளாகத் துடிப்பவர்களே, தேசப் பக்தர்களாவதற்கு அளாவும் அன்பர்களே, உங்கள் உணர்ச்சிகள் பொங்கி எழட்டும். உங்களுக்கு உணர்வு இருக்கின்றதா? என்பார்.

மனிதனை மனிதானக்கும் மதந்தான் இன்று நமக்குத் தேவை. மனிதனை மனிதாக்கும் கல்விதான் இன்று தேவை. எல்லா வகைகளிலும் மனிதனை மனிதனாக்கும் தத்துவங்கள்தான் இன்று நமக்கு வேண்டும். எல்லோர் உள்ளங்களிலும் உள்ள ஆன்ம சக்தியைப் பலவீனப்படுத்தும் அனைத்தையும் விஷம் என்று கருதி ஒதுக்கி எறியுங்கள். அதில் வாழ்வு இல்லை, அதில் உண்மை ஒளி இல்லை. உண்மை, மிகுந்த ஆற்றலைக் கொடுக்கிறது. உண்மைதான் தூய்மை. உண்மையே மனதில் புத்தொளி பிறக்கச் செய்யும்.

சமயங்கள் அனைத்திடமும் சகிப்புத்தன்மை வேண்டுமென்று மட்டும் நாங்கள் நம்பவில்லை. சமயங்கள் எல்லாமே உண்மையானவை என்றும் அவற்றை ஏற்றுக் கொள்கிறேன். பல நாடுகளிலிருந்தும் பல சமயங்களிலிருந்தும் துன்புறுத்தப்பட்டு வெளியேற்றப்பட்ட மக்களை ஏற்றுக் கொண்ட நாட்டைச் சேர்ந்தவன் நான் என்று பெருமிதம் கொள்கிறேன், என்று சகிப்புத் தன்மையோடு மாநாட்டில் சுவாமிஜி சொன்னார்.

***தேசிய இரத்த ஓட்டமானது*** சீராக இல்லாத எந்த தேசமாவது வளர்ந்தோங்கியதாக ஒரே வரலாற்றில் நீங்கள் கண்டதுண்டா? என்றும் கர்ஜித்தார். இந்தியாவில் ஒற்றுமையையும், சௌஜன்யத்தையும் நிலை நிறுத்துவதில் உள்ள சிரமங்களை சிலர் எடுத்துக் காட்டிய போது, ஆண்டவன் அருளால் எல்லாமே சுலபமாகக் கைகூடி விடுகின்றன. ஏழைகளுக்கும், துயரில் ஆழ்ந்திருப்போருக்கும் சாதி, மத வித்தியாசமில்லாமல் சேவை புரிவதுதான் உங்கள் கடமை.

உங்கள் செயலின் பயனைப் பற்றி யோசிக்க உங்களுக்கு அதிகாரம் ஏது? தொடர்ந்து செயலாற்றிக் கொண்டே போவதுதான் உங்கள் கடமை, என்ற *கீதாசாரியாரின்* உபதேசத்தை நினைவூட்டினார். விவேகானந்தரது ஆன்மீக உயில் இதுவே என்பது பல அறிஞர்களின் மதிப்பீடு.

*மக்கள் எல்லோரும் ஒரே கடவுளின் புதல்வர்கள்*, எனவே சமநிலையில் இருப்பவர்கள். கடவுளுக்குச் சேவை செய்ய விரும்புகிறவர் மனிதனுக்குச் சேவை செய்ய வேண்டும். அதுவும் அடித்தளத்தில், ஏழ்மையில், இழிநிலையில் இருப்பவர்களுக்குத் தொண்டு புரிய வேண்டும். தீண்டாமை மனிதத் தன்மையற்றது. சகோதரர்களே, கைகொடுத்து அவர்களைத் தூக்கி விடுகிறார்கள் என்றார் விவேகானந்தர்.

## சொன்னதில் சில துளிகள்

பாரத நாட்டில் நாம் மனிதர்களைப் படைக்க வேண்டும், என்பதை முழு மூச்சான குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தருளிய விவேகானந்தப் பெருமான் மனிதன் மதம், கடவுள், வழிபாடு ஆகியவைப் பற்றி அருளிய சில மணி வாசகங்கள் பின்வருவன :

இந்தியாவுக்கு இஸ்லாமிய உப்பும், வேதாந்த மூளையும் தேவை, மிருகத்தை மனிதனாக்குவதும், மனிதனை தெய்வமாக்குவதும் மதம், மனிதன் இயற்கையை வெல்வதற்காகப் பிறந்தானேயேன்றி, இயற்கையின் வழியில் செல்வதற்காகப் பிறக்கவில்லை.

கடவுள் மனிதனாகி விட்டார்; மனிதன் மறுபடியும் கடவுளாகக் கூடும். கடவுள் நம்பிக்கை இல்லாதவனை நாத்திகன் என்று பழைய மதம் கூறும். தன்னம்பிக்கை இல்லாதவனை நாத்திகன் என்று இன்றைய மதம் கூறும். ஒரு தனி மனிதனோ, அல்லது தனி நாடோ தன்னம்பிக்கை இழந்துவிடுமானால், அது செத்து சுண்ணாம்பாவது உறுதி. எனது நாட்டில் பட்டினியோடு ஒரு நாய் இருக்கிற வரையில் அதற்கு உணவு கிடைக்க வழிவகுப்பதுதான் எனது மதம். உன்னுடைய விடுதலையை மட்டும் நீ தேடிக் கொள்ள முயல்வாயானால் உனக்கு நரகம்தான் கிடைக்கும்.

ஏ பாரத நாடே! உனது அமைப்பு எல்லையற்ற உலகத்தாயின் பிரதிபலிப்பே என்பதை மறவாதே; அறிவிலி ஏழை, பாமரன், சக்கிலி, எல்லோரும் எனது சதையும், இரத்தமும் உடன்பிறப்பு என்பதை மறவாதே! ஒவ்வோர் இந்தியனும் என் சகோதரன், என் உயிர் என்று முழங்கு! இந்தியாவின் தெய்வங்களெல்லாம் என் தெய்வங்கள். இந்திய ஜன சமுதாயம் எனது குழந்தைப் பருவத்தின் தொட்டில், எனது இளமையின் பூங்கா, எனது முதுமையின் காசி சேத்திரம் என்று சொல்லு!

இந்தியாவை இனி யாரும் அடக்க முடியாது. இனியும் அது தூங்கப் போவதில்லை. அந்நிய சக்தி எதுவும் அதனைப் பின்னுக்கு இழுக்க முடியாது. காலம் கடந்த இந்தியா இப்போது எழுந்து நிற்கத் தொடங்கி விட்டது. சோறு! சோறு!! இங்கு எனக்குச் சோறு தரமுடியாத கடவுள், சொர்க்கத்தில் எனக்கு நித்திய இன்பம் தருவார் என்பதை நான் நம்பவே மாட்டேன். இந்திய தேசிய இயக்கத்தின் போர்க்களக் கவியரசராகத் திகழும் சுப்பிரமணிய பாரதியார் 1908-ல் தமது *இந்தியா* பத்திரிக்கையில் சுவாமிகளைக் குறித்து எழுதியது தேசிய வளர்ச்சியில் விவேகானந்தரது பங்கு என்ன என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

## விவேகானந்தரின் நாட்டுப் பற்று

பரம ஞானியாகிய ஸ்ரீகிருஷ்ண பகவான் மஹாபாரதப் போரிலே சேர்ந்தது போலவும், சர்வ பந்தங்களையும் துறந்த ராமதாஸ் முனிவர், மகாராஜா சிவாஜிக்கு ராஜ தந்திரங்கள் சொல்லிக் கொடுத்தது போலவும், தற்காலத்தில் அநேக துறவிகள் நமது சுதேசிய முயற்சியிலே சேர்ந்திருக்கிறார்கள். காலஞ்சென்ற விவேகானந்த பரமஹம்ச மூர்த்தியே இந்த சுயாதீனக் கிளர்ச்சிக்கு அஸ்திவாரம் போட்டவர் என்பதை உலகம் அறியும். *விழுப்புற்ற இந்தியா* என்னும் கவிதையில், இந்தியாவின் விழிப்பு வையகத்தின் விழிப்பிற்கு உதவும் என்று ஓதுகிறார். *சக்தி செயல்படட்டும்* என்ற அடிகளாரின் சங்கநாதம் இருபோக்குகளைக் கொண்டது. ஒன்று தேசியத்திற்கும் மற்றொன்று உலகமனைத்திற்கும் கூறப்பட்டதாகும். இந்தக் கருத்தை ரோமன் ரோலாண்ட் பின்வருமாறு விளக்குகிறார். மாபெரும் அத்வைதத் துறவியாகிய விவேகானந்தரை பிரபஞ்சத்தைப் பற்றிய பொருள்தான் எடுப்பாக ஈர்த்தது என்பதில் ஐயமில்லை. ஆனால், தேசியத்தின் நரம்புகளுக்கு அவர் முறுக்கேற்றியது தான் இந்தியாவிற்கு மறுபிறப்பை அளித்தது.

இந்தியனாகப் பிறக்க கிடைத்திருக்கும் வாய்ப்பே பெரிய பாக்யம். இந்தியர் எல்லோரும் என் சகோதரர்கள். இந்தியர் வணங்கும் தெய்வங்களே என் குல தெய்வம். இந்தியப் பூமியே என் நித்திய சுவர்க்கம். இந்தியாவின் க்ஷேமமே என் பிரம்மானந்தம்! என்று விவேகானந்தர் பறைசாற்றினார். அத்தகைய பாரத நாட்டின் க்ஷேமத்திற்கு இடையறாது, ஒற்றுமையுடன் உண்மையுணர்வுடன் உழைத்தாக வேண்டிய பெரும்பணி இளந்தலைமுறையினரை எதிர்நோக்கி நிற்கிறது.

இந்தியாவைக் கடவுளாக கருதி, சேவை செய்யும்படி நாட்டு மக்களுக்கு அறைகூவல் விடுத்தார். ஏழைகள் வயிரார உண்பதற்கு உணவு கிடைக்கும்படி செய்வதுதான் என்னுடைய மதம் ஆகும், என்று முழங்கினார். உண்மையான இந்தியாவை அறிய விவேகானந்தரின் நூல்களைப் படிக்க வேண்டும் என்று கவியரசர் தாகூர் கூறியது முற்றிலும் உண்மை. அன்பர் பணி செய்வதில் இன்பநிலைக் கண்டவர்தான் விவேகானந்தர்.

### முடிவுரை

இன்றைய நெருக்கடி நிலையில் சுவாமி விவேகானந்தருடைய தியாக வாழ்க்கையும், அறிவுரைகளும், நமது தேசிய ஒருமைப்பாட்டைக் காத்து நாட்டின் கௌரவத்தையும் பிரதேச உரிமையையும் இழக்காது காக்க உற்சாகத்தையும், ஊக்கத்தையும் ஊட்டும் சாதனையாகப் பயன்படும் என்பது உறுதி.

வாழ்க சுவாமி விவேகானந்தர்! வளர்க அவரது தேசிய ஒருமைப்பாடு !!

---

## *A word*

A Careless word may kindly strife;

A Cruel word may wreck a life;

A bitter word may insist hate;

A brutal word may smite & kill;

A gracious word may smooth the way;

A joyous word may light the day;

A loving word may heal & bless.

## *Colour Quiz*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Yellow | + | Red | = | Orange |
| Blue | + | Yellow | = | Green |
| Blue | + | Red | = | Purple |
| Black | + | White | = | Grey |
| Red | + | White | = | Pink |
| Red | + | Blue | = | Violet |

# சின்ன சின்ன சிந்தனை அலைகள்...

சாதனைகள் பல புரியப் போகும் வலிமை வாய்ந்த உள்ளம் கொண்ட நண்பர்களே!

இதோ நம் முன்னேற்றத்தைப் பற்றி சில சிந்தனை அம்புகள். நம்புங்கள் தைரியமாக உங்களையும், உங்கள் திறமையையும் உங்கள் கடவுளையும், ஏனென்றால் உங்களால் முடியாதது ஒருவராலும் முடியாது. உங்களை நீங்கள் நம்பும் போது, நேசிக்கும் போதுதான் உங்களை மற்றவர்கள் நேசித்து நம்புவார்கள். அப்போதுதான் உங்களின் உயர்வு எல்லையற்று வளரும்.

தொடங்குங்கள், உங்கள் வெற்றி ஓட்டத்தை தொடங்கி வையுங்கள். தொடங்காத காரியம் நடப்பதுமில்லை முடிவதுமில்லை. தொடக்கம்தான் செயலின் வெற்றியை நிர்ணயிக்கும் முக்கியமான படியாகும். நேர்மையாக நடவுங்கள். கேட்கப்படாததை கேளுங்கள். சிந்திக்கப்படாததை சிந்தியுங்கள். செய்யப்படாததை செய்யுங்கள். சொல்லப்படாததை சொல்லுங்கள். ஆராயப்படாததை ஆராயுங்கள். முடிக்கப்படாததை முடியுங்கள்.

முன்னேற முனைபவர்களில் இருவகையினர் இருக்கிறார்கள். ஒன்று வாய்ப்புகளை எதிர்பார்த்து இருப்பவர்கள், மற்றொன்று வாய்ப்புகளை உருவாக்க முனைபவர்கள். வாய்ப்புகளுக்காக் ஏங்கி அலைபவர்கள் புதையல் கிடைக்கும் என நம்புவர்கள். வாய்ப்புகளை உருவாக்குபவர்கள் தான் மிக உயர்ந்தவர்கள். ஏனெனில் இவர்கள் புதையலை விட உயர்ந்தவர்களையே உருவாக்குகின்றவர்கள்.

இலட்சியம், முன்னேற்றம், உயர்வு, வெற்றி போன்ற வார்த்தைகள் உங்களின் சொத்தாக இருக்கட்டும். பயன்படுத்துங்கள் பேச்சளவில் சிந்தனையளவில் மட்டுமின்றி முக்கியமாக செயலளவிலும் கற்பனைகள் பல இருப்பினும் நடைமுறையை மறந்து விடாதீர்கள். கற்பனையை மட்டும் கண்டு ரசிப்பவர்கள் பைத்திய காரர்கள். செயலளவில் சிந்தனையை கொண்டு வருபவர்களே வெற்றிகரமான இலட்சிய மனிதர்கள்.

நாட்டிற்கு என்னச் செய்தோம் எனக் கூட நீ எண்ண வேண்டாம் உனக்காக உன் முன்னேற்றத்திற்காக நீ என்ன செய்திருக்கின்றாய் என சிந்தித்துப் பார். ஏனெனில் நீ முன்னேறினால் உன் குடும்பமும் உன் குடும்பம் முன்னேறினால் நம் சமுதாயமும் நம் சமுதாயம் முன்னேறினால் நம் நாடும் உறுதியாக முன்னேறும் என்பதில் மிகுந்த உண்மையிருக்கிறது.

நமது வெற்றிக்கு தேவையான மூன்று:-

1. மிகச் சரியாக இலட்சியத்தைத் தேர்வுச் செய்யுங்கள் Target
2. இலட்சியத்தை அடைய தெளிவான திட்டத்தை உருவாக்குங்கள் Plan
3. நேர்த்தியாக விரைவாக ஆர்வத்துடன் செயல்படுங்கள். Action

சிறந்த இலட்சியம் → சிறந்த பண்பு நலன் → சிறந்த செயல்பாடு → சிறந்த வெற்றி

உங்கள் இலட்சியம் அகன்றதா, ஆழமானதா? சோடியம் விளக்கா இல்லை லேசர் கதிரா? சோடியம் விளக்கு நிறைய வெளிச்சம் தரலாம், லேசரோ மிகஅதிகமான தூரத்திற்கும் ஊடுருவிச் செல்லக்கூடியது உங்கள் இலட்சியம். லேசர் கதிரைப்போல ஓர் நேர்க் கோட்டுப் பாதையில் அடர்த்தியானதாய் மிக ஆழ்ந்ததாய் ஒரே குறியுடைய தாய் இருக்கட்டும். உங்களால் உயர்மின் எல்லைக்கு கட்டாயம் செல்ல முடியும். ஆழமான கிணற்றில் தான் அதிக நீர் பெருகுகின்றது.

உன் வாழ்வின் சின்னச் சின்ன செயல்களுக்கு பெரிதாக முக்கியத்துவம் கொடுத்து வெற்றி பெறு. நீ கட்டாயம் பெரிய பெரிய மகத்தான செயல்களை எல்லாம் எளிதில் செய்து வெற்றி பெறுவாய். ஏனென்றால் சில சின்னஞ்சிறு வெற்றிகளால் நமக்கு உற்சாகம் கிடைக்கின்றது. அந்த உற்சாகத்தால் நமக்கு பெறும் வெற்றிகள் கைவசமாகின்றன.

ஆசைப் படுங்கள் — மிகச் சிறப்பான நிலையை அடைய
கற்பனை செய்யுங்கள் — நீங்கள் முன்னேறுவதற்காக
கனவு காணுங்கள் — நீங்கள் வெற்றிகரமான மனிதராக
சிந்தனை செய்யுங்கள் — நீங்கள் சாதிப்பதற்காக
செயல்படுங்கள் — நீங்கள் பிரகாசிப்பதற்காக.

அச்சத்தை அழித்துப்போடு, வன்முறையை ஒழித்து போடு
உயிரை துச்சமென நினை, தீமைகளை தீக்கிரையாக்கு
தைரியத்தோடு செயல்படு, அடக்குமுறையை தகர்த்தெறி
அநியாயத்தை தட்டி கேள், அன்புக்கு அன்பு செய்
கொடுமைக் கெதிராய் கொதித்தெழு, நன்மைகளை உன் வழியாக்கு
என்றும் வெற்றி உன் வசமாகும்.

குறிக்கோளற்ற குழப்பமான மனநிலையை விட்டொழியுங்கள். ஏனென்றால் அந்நிலையில் கனவு காண மட்டும்தான் இயலுமே தவிர உண்மைச் செயல்களில் வெற்றி பெற முடிவதில்லை. எனவே உறுதியான தெளிவான உயர்வான ஒரே குறிக்கோளை எற்படுத்திக் கொண்டு நேர்மையாக செயல்படுங்கள். வெற்றி ராசி உங்கள் பக்கம்.

பேசும்போதும் செயல்படும் போதும் தைரியத்தோடு இருங்கள். தெரியாததை தெரிந்தது போல் பேசாதிருங்கள். அறியாத செயல்களில் அனுபவசாலி போல் செயல் பட்டு அவமானம் அடையாதிருங்கள். உண்மையை ஒத்துக் கொள்ளுங்கள். திறமை யை அடக்கம் என்ற பெயரில் அடக்கம் செய்யாதிருங்கள் சரியான வழியில் வெளிப் படுத்துங்கள். அப்போது உங்களின் வெற்றி மிக எளிதாகும்.

பார்ப்போம், இல்லை, முடியாது, வேண்டாம் என்ற வார்த்தைகளை எப்போதும் பயன்படுத்தாதிருங்கள். இவை நம் சக்தியை குறைக்கும் வார்த்தை விஷங்கள். ஆனால் தேவையான போது பயன்படுத்த மறக்காதீர்கள். இல்லையேல் அதிக சுமையில் அவதிப்பட நேரிடும். ஏனென்றால் சில நேரம் விஷமும் மருந்தாகுமன்றோ?

கட்டாயத்தின் பேரில் காரியங்களை செய்கிறவன் சோம்பேறியாகி போகிறான் எதையும் விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் செய்கிறவன் சுறுசுறுப்புடன் முன்னேறுகிறான். சின்ன சின்ன சில்லரை சுகங்களுக்கும், மகிழ்ச்சிகளுக்கும் ஆட்ப்பட்டு புதைமணலில் அமிழ்ந்து விடாதிருங்கள்.

இளைஞர்களாகிய நம்மிடம் உள்ள சில பிரச்சினைகள் :-

1) குறிக்கோளற்று அலைந்துக் கொண்டிருத்தல்.
2) போதை பழக்கங்களால் சீரழிதல்.
3) சினிமாக்கள், பத்திரிக்கைகள், விளையாட்டுக்கள், டெலிவிஷன், நண்பர்கள் வட்டம், ஆன்மீகம் ஆகியவற்றால் ஏற்படும் எதிர்மறை பாதிப்புக்குள்ளாதல்.
4) காதல் என்ற பெயரில் ஒழுங்கற்ற முறையில் எதைக் காதலிக்கிறோம் எனத் தெரியாமல் காதலித்து சிந்தித்து அலைந்து திரிந்து தன்னையே அழித்துக் கொள்ளுதல்.
5) ஜாதி, மத வெறி உணர்வு.
6) சமுதாயத்தில் நடக்கும் தப்புக்களை கண்டும் காணாமல் செல்லுதல்.
7) ஆணவம் கொண்டு தன்னை பெரியவனாக காட்டச் செய்யும் செயல்கள்.

இவ்வாறு நம் சிந்தனை, பேச்சு, செயலில் உள்ள இந்த களைகளை எடுத்து அழித்தால் தான் லட்சிய மனிதர்களாக அல்ல; சாதாரண மனிதர்களாவது மகிழ்ச்சியாக வாழ முடியும்.

நேர்மைக்கு கட்டுப்பட்டு, அன்புக்கு அன்புகாட்டி, ஆணவத்தை அடக்கி, பிறரை மதித்து, திறனை வளர்த்து, தன்னை நம்பி உண்மையான உயர்வான வழியில் இலட்சிய பாதையில் நடந்து ஜெயித்துக் காட்டுபவனே நல்ல பண்பாளன் ஆவான்.

அடக்குமுறை, வன்முறையை பயன்படுத்தாதிருங்கள். கோழைகளும், திறனற்ற மூடர்களுமே இவற்றை பயன்படுத்துகிறார்கள். எந்த சமயத்திலும் இவர்களை இனங்கண்டு கொள்ளலாம். இவர்களை கண்டு பயப்படாதிருங்கள். இவர்களை வெல்வது எளிது. இவர்களை வெல்லும் முதல்வழி அலட்சியப்படுத்துங்கள். அதற்கும் மீறினால் நேரிடையாக மோதி ஜெயித்து வீழ்த்துங்கள். இவர்கள் நாட்டின் முன்னேற்றத்தைக் கெடுக்கும் புல்லுருவிகள்.

சாவைக் கண்டு அஞ்சாதே

ஏனென்றால்,

நீ உயிரோடிருக்கும் வரையும் சாவு உன்னை அடைவதில்லை.

சாவு உன்னை அடையும் போது நீ உயிரோடிருப்பதில்லை.

எப்போதும் ஜெயித்துக் கொண்டே இருங்கள். நண்பர்களை அன்பால் ஜெயித்துக் கொண்டிருங்கள். பகைவர்களை பண்பால் ஜெயித்துக் கொண்டிருங்கள்.

நண்பா,

உன்னை உணர்ந்து கொள்.

உற்சாகத்தோடு செயல்படு.

உனக்கே வெற்றி!!!

என்று என்றென்றும் வாழ்த்தும்
உங்கள் நண்பன்
பா. மோசஸ்
மூன்றாமாண்டு வேதியல் துறை



## எங்கே புன்னகை...?

* குடியரசு தினம்
குடி மூழ்கும் தினமென்று
யார் நினைத்தார்...?

* குழந்தை விழுங்கிய மண்
குழந்தையையே விழுங்குமென்று
யார் நினைத்தார்...?

* கட்டிய வீடுகளே
கல்லறை ஆகுமென்று
யார் நினைத்தார்...?

* எதிரியின் சதியில் வென்றவர்
இயற்கையின் விதியில் தோற்போமென்று
யார் நினைத்தார்...?

* அடுக்கு மாடி வீடுகள்
அப்பளம் போல் நொறுங்குமென்று
யார் நினைத்தார்...?

* பிரித்தது நிலமண் - அதில்
பிரிந்தது ஒரு கண்
ஒரு கண் போதும்
தேடுகிறேன் சொந்தங்களை...

* இடிபாடுகளில் இடிந்து போய்
மண்ணுக்கடியில் மடிந்து போய்
முட்டி மோதி தட்டி தடுமாறி
தேடுகிறார் சொந்தங்களை..?

* அண்ணனை தேடும் தம்பி
தம்பியை தேடும் தங்கை
கணவனை தேடும் மங்கை
தாயை தேடும் மகன்...?

* தேடியது கிடைத்தது
உடலமாய் அல்ல
சடலமாய்...! சடலமாய்...!

* அழவில்லை யாரும்
அழமுடியவில்லை பாவம்
அழுவதற்கு கண்ணில்
கண்ணீர் இல்லையே ..!

* பிணம்... பிணம்...!
கண்படும் இடமெல்லாம் பிணம்
கைதொடும் இடமெல்லாம் பிணம்

* ஒரு பிணம் என்றால்
ஊரே அழுவது இங்கே...!
ஊரே பிணம் என்றால்
யார் அழுவார் அங்கே...!

* ஒரு நாளைக்கு மூன்று முறை
உண்பதெல்லாம் இங்கே...!
மூன்று நாளைக்கு ஒரு முறை
உண்பது மட்டும் அங்கே...!

* ஒரு உடலை நூறு கட்டைகள்
எரிப்பதெல்லாம் இங்கே...!
நூறு உடலை ஒரு கட்டையில்
எரிப்பதைப் பார் அங்கே...!

* படுத்துறங்க பஞ்சணைதான்
பயன்படுத்துவது இங்கே...!
புஜ் நகர புதல்வரிடம்
புன்னகைதான் எங்கே...?

ஏ.பா சிவகுமார்
I st Chemistry

## கல்லூரி பருவம்

கூட்டுபுழுக்களை வண்ணத்துப்
பூச்சிகளாக மாறும்
வசந்த காலம்

கல்வி கடலின் கரையைக்
காண தொலை நோக்கியாக
உதவிய காலம்

சாதாரண மனிதனை சமுதாயத்தில்
சாதனை மனித னாக்கும்
பொற் காலம்

முக்கனியான இம்முக்காலம்
போல எக்காலமும்
வரப் போவதில்லை

துன்பங்களை அஸ்தமன மாக்கி
இன்பங்களை உதய மாக்கும்
இனிய காலம்

பிற்காலம் பிரகாசமாக
அமைய நட்சத்திரமாக
திகழும் காலம்

T. சுப்பிரமணியன்
III Chemistry

# மனித நேயம் மடியப்போவதில்லை

மகாத்மா என்ற
சொல் மறக்கபடாத வரை
மனிதன் மண்ணுக்குள்
புதையப் வோவதில்லை

தேன் கொடுக்கும்
பூக்கள் உள்ள வரை
சகோதரத்துவம் முற்றிலும்
ஒழிந்து விடப்போவதில்லை

வறுமை என்ற சொல்லை
வருத்தத்துடன் பார்ப்பவர்கள் உள்ளவரை
வறுமை நிரந்தரமாய்
நிலைக்கப் போவதில்லை

தோல்வி என்ற நரகம்
வெற்றி என்ற சொல் இருக்கும் வரை
நித்தம் நித்தம்
நிந்திக்கப் போவதில்லை

சுய நலமில்லா
ஆசிரியர்கள் உள்ள வரை
மாணவ சமுதாயம்
வழிமாறி, திசைமாறி போவதில்லை

இல்லாதவனை இருப்பவன்
இரக்கத்தோடு பார்க்கும் வரையில்
மழையும்
பொய்க்கப் போவதில்லை.

க. மாரியப்பன்
இரண்டாம் ஆண்டு விலங்கியல்

# ஹைக்கூ கவிதைகள்

## அரசியல்

தாவும் பழக்கம்
தவளைக்கு மட்டுமா?
அரசியல் வாதிகள்.

## லஞ்சம்

இந்தக் கைகள் கறைபடியாதவை
அதனால் தான் கேட்கிறோம்
அன்பளிப்பு

## வேலை இல்லாத் திண்டாட்டம்

வேலை இல்லாத் திண்டாட்டத்தால்
வேலைக்குச் சென்றேன்
வேலை இல்லை என்பதை எழுதுவதற்காக

## வறுமை

வாய்க்கரிசி போட்டு அனைவரும் அழுகிறார்கள்
நாங்களும் அழுகிறோம்
வாய்க்கு அரிசிக்காக...

# நவீன திருக்குறள்

1 அரிதரிது பேருந்து வருவது அதனினும்
அரிது நிறுத்தத்தில் நிற்பது.

2 எல்லா விளக்கும் விளக்கல்ல - எரியாத
முனிசிபாலிட்டி விளக்கே விளக்கு.

3 கற்றது கால்குலேட்டர் அளவு கல்லாதது
கம்யூட்டர் அளவு என்பர்.

4 கற்க கணிப்பொறி கற்றபின் காண்க
காசு பெறும் வழி.

5 பணமும் ஏனைய பதவியும் கண்ணென்ப
வாழும் அரசியல் வாதிக்கு.

6 நகையும் தொகையும் உடைத்தாயின் -
இலாவாழ்க்கை
நரகமும் வனவாசமும் அது.

9 தீயிட்டு கொழுத்த தம் தீயகுணமிருக்க
பேருந்தைக் கொளுத்துவது பேதமை.

C. Julie Nirmala
I B Com.

# கடந்த 50 ஆண்டுகளில் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

## குடியரசு தின பொன்விழா போட்டிகள்

தி.சுப்பிரமணியன்
இளங்கலை மூன்றாம் ஆண்டு,
வேதியியல்.

இடம் : தூய சவேரியார் கல்லூரி
தேதி : 11-01-2001

கட்டுரை போட்டி
முதல் பரிசு ரூ. 1000/-

## முன்னுரை

கல்வியில் ஏற்படும் மாற்றம் சமூக மாற்றத்திற்கு வழிவகுக்கும். கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகக் கருதப்படுவது கல்வி பயிலும் மாணவர்களைச் சமூக இயல்பினராக்குதல் ஆகும். இச்செயல் முறை மூன்று நிலைகளைக் கொண்டது. முதலில், ஒருவன் தான் சமூகத்தில் ஓர் உறுப்பினன் என்றுணர்கிறான். இது சமூக உணர்வு (Social awareness) அல்லது சமூக விழிப்புடமை எனப்படும். பின்பு சமூக வாழ்வில் தான் பங்கு கொள்வதைப் பற்றி அவன் மகிழ்ச்சியடைகிறான். (Social Enjoyment) முடிவாக சமூக ஒற்றுமை, சமூக கட்டுப்பாடு, சமூக முன்னேற்றம் ஆகியவற்றில் தனக்குள்ள பொறுப்புகளை அறிந்து (Social Responsibility) நடக்கிறான். இவ்வாறு கல்வியானது சமுதாயத்தை சிறந்ததாக அமைக்க முக்கியக் கருவியாக விளங்குகிறது. சிறந்த முறையில் கல்வி கற்பித்தலின் மூலமே சிறப்பான சமூகத்தை அமைக்க முடியும். கல்வித் துறையில் இன்று நாம் மிகப் பெரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளோம். கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தால் நாம் இன்று பல வசதிகளைப் பெற்று வளமாக வாழ்கிறோம். அவற்றுள் சிலவற்றை இங்கு காண்போம்.

## தொழில் புரட்சி மற்றும் தொழில் நுட்பத் துறை வளர்ச்சி

20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கல்வியினால் ஏற்பட்டுள்ள தொழில் புரட்சியும், தொழில் நுட்பத்துறை வளர்ச்சியும் சமூக மாற்றங்களுக்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன. புதிய நுண்முறைகள், கண்டுபிடிப்புகள், புது உற்பத்தி முறைகள் போன்றவை உலக நாடுகிளல் புதிய வாழ்க்கை முறைக்கு அடிப்படை காரணங்களாகும். தொழில் நுட்ப இயந்திர யுகத்தின் விளைவாக சமூகம் மூன்று முன்னேற்றங்களை அடைந்துள்ளது. 1.பழையமரபுகள், எண்ணங்கள் ஆகியவை வழக்கொழிந்தன. 2. புதிய நம்பிக்கைகள், கோட்பாடுகள் ஆகியன உருவாயின. 3.வேலைசெய்தல், பொழுதுபோக்குச் செயல்களில் இயந்திரங்கள் பங்கு கொள்ளுதல் ஆகியவை மூன்று முக்கிய மாற்றங்களாகும். இவ்வாறு சமூகம் முன்னேற கல்வி தனது பங்கைச் சிறப்பாகச் செய்துள்ளது.

## இன்றைய கல்வி நிலை

இன்றைய சமுதாயத்தில் ஒருவனது மதிப்பு நிலை அவன் கற்ற கல்வியைப் பொறுத்து அமைகிறது. உடலுழைப்பின் மேன்மை, சமூகப் பணிகளின் முக்கியத்துவம், மக்கள் தொகைப் பெருக்கத்தை குறைத்தல், சூழ்நிலையைப் பாதுகாத்தல், குறுகிய மனப்பான்மைகளை அகற்றுதல், நாட்டுப்பற்று, உலகப்பற்று போன்றவற்றை வளர்த்தல் ஆகிய அனைத்து சமூக மாற்றங்களும் இன்றைய கல்வியின் விளைவுகளாகும்.

## சுதந்திரத்திற்குப் பின் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

அரசியல் சாசனத்தின் கூற்றுகளுக்கேற்ப, பல்வேறு துறைகளில் மக்கள் நலம் பேணி உதவும் அரசுத் துறைகள் தோன்றின. ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, விவசாயம், தொழில் மற்றும் கல்வி வளர்ச்சி ஆகியவை ஊக்குவிக்கப்பட்டன. நாட்டின் புதிய நிலைகளுக்கு ஏற்ப, பல்வேறு துறைகளுக்குத் தேவைப்படும் தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்குவதற்காக கல்வி நிறுவனங்களும், கல்வி முறையும் இக்காலத்தில் பல திறக்கப்பட்டு காணபடுகின்றன. இன்று பொதுக் கல்வியோடு, சமூகக் கல்வி, விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கு உதவும் கல்வி, உடல் நலக்கல்வி, பெண் கல்வி, ஆசிரியக் கல்வி, உடல் ஊனமுற்றோர், புலக் குறைபாடுடையோர் போன்றோர்க்கான கல்வி போன்றவற்றிலும் தீவிரக் கவனம் செலுத்தப்படுகிறது.

## பெண் கல்வி

நாட்டில் பெண்களுக்காக பல பெண்கள் பள்ளிகள், கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன மற்றும் பெண்களுக்கு பண உதவியளித்தல், பெண்கள் தங்கிப் படிக்க மாணவர் இல்லங்கள் அமைத்தல், பெண்களுக்காக கல்வியில் சில விழுக்காடு வாய்ப்புகள் போன்ற பலவற்றை அரசு ஏற்படுத்தி கொடுத்துள்ளது. பெண் கல்வியுடன் பெண்களுக்கு வேலைவாய்ப்புகள், அரசியலிலும், நிர்வாகத்திலும் முக்கிய பங்கு போன்றவையும் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டன.

## உயர் கல்வி

ஐந்தாண்டுத் திட்டங்களின் விளைவாக உயர் கல்வி வளர்ச்சியடைந்துள்ளது. பல்கலைக் கழக மானியக் குழு (U.G.C.) இதற்கு பேருதவி புரிகிறது. உயர்படிப்பு மையங்கள், கோடைப் பள்ளிகள், கருத்தரங்குகள், மறுபயிற்சி வகுப்புகள் போன்றன செயற்படுத்தப்பட்டு உயர் கல்வித் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. கல்விக்கான பல்வேறு முயற்சிகளை இணைத்தல், கல்வித் தரங்களை (உயர் நிலைக்கல்வி, உயர்கல்வி) நிர்ணயித்தல், அறிவியல் தொழில் நுட்ப ஆராய்ச்சியை ஊக்குவித்தல் போன்றவற்றில் மைய அரசின் கல்வித்துறை நேரடி கவனம் செலுத்தி வருகிறது.

## கல்விக்கான அமைப்புகள்

மைய அரசின் கல்வித்துறை தொழில் நுட்பக் கல்விக்கும், மைய அரசின் உணவு - விவசாயத்துறை, விவசாயக் கல்விக்கும், மைய அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை மருத்துவக் கல்விக்கும், நேரடிப் பொறுப்பேற்றுள்ளன. 1956-ல் நிறுவப்பட்ட பல்கலைக் கழக மானியக்குழு கலை, அறிவியல், வாணிபம் போன்றவற்றில் உயர் கல்விக்கான பொறுப்பை ஏற்றுள்ளது. தொழில்நுட்ப கல்வி வளர்ச்சிக்கென ஓர் அகில இந்தியக் குழுவும் (AICTE) நிறுவப்பட்டுள்ளன. இத்துடன் கான்பூர், சென்னை, மும்பை, கல்கத்தா ஆகிய இடங்களில் பிராந்தியக் குழுக்களும் செயற்படுகின்றன மற்றும் ஒவ்வொரு மாநிலத்திலும் தொழில்நுட்பக் கல்விக்கான வாரியமும் (SBTE) செயல்படுகிறது. பொதுவாகக் கல்வி வளர்ச்சிக்கு பாடுபடும் மைய நிறுவனமாக கல்வி வளர்ச்சிக்கு பாடுபடும் மைய நிறுவனமாக NCERT செயல்பட்டு வருகிறது, இவற்றுடன் கல்வி வளர்ச்சி பற்றிய பரிந்துரைகளை வழங்க எல்லா மாநில உறுப்பினர்களையும் கொண்ட (Central Advisory Board of Education) ஒன்றும் மைய அரசினால் செயல்படுத்தபட்டு வருகிறது.

## கற்பித்தலுக்கு உதவும் துணைக் கருவிகள்

புகைப்படங்கள், பின்னட்டைகள், சுவரொட்டிகள், கருத்துப் படங்கள், கோட்டுபடங்கள், வரைபடங்கள் ஆகியவற்றின் மூலமாக கல்வி பயிற்றுவிக்கப்பட்டு வந்தன. தற்போது எபிடையாஸ்கோப், பிம்பங்களைத் தலைக்கு மேல் திரையில் வீழ்த்தும் கருவி (OHP) நழுவங்களையும் திரைப்படத் துண்டுகளையும் காட்டும் கருவி (Slide & Film Strip Projector) ஆகிவையும் பயன்படுத்துகின்றன. இவற்றிற்கெல்லாம் கணிப்பொறி கல்வித் துறையில் மாபெரும் சகாப்தத்தை உருவாக்கியுள்ளது.

## கணிப்பொறியின் துணையுடன் கற்றல்

கணிப்பொறியின் செயற்பாடு கற்பித்தலில் பயன்படுவதைப் பொறுத்து மூன்று முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. 1 கணிப்பொறியின் மேலாண்மையினை முழுமையாக ஏற்று நிகழும் கற்பித்தல்.(Computer Managed Instruction) 2 கணிப்பொறியின் அடிப்படையில் அமைக்கப்படும் கற்பித்தல் (Computer based Instruction) 3. கணிப்பொறியின் துணையுடன் நிகழும் கற்பித்தல் (Computer Assisted Instruction) இவ்வாறு இக்காலத்தில் கணிப்பொறி மூலம் கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது.

## நிறைவுரை

இத்தகைய வழிகளில் கல்வியானது முன்னேற்றம் அடைந்தது மட்டுமல்லாமல் சமூகம் முன்னேற்றமடைய ஓர் கருவியாக விளங்குகிறது. கல்வித் துறையில் நாள்தோறும் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு வருகின்றன. இன்னும் புதிய கண்டுபிடிப்புகள், புதிய ஆராய்ச்சிகள் ஆகியவை நடைபெற்று வருகின்றன. கல்வித் துறையில் ஏற்படும் மாற்றத்திற்கு முடிவு என்பதே கிடையாது.

# வேத கால கணிதம்

C. Sivagami,
I B. Sc., Mathematics

**முன்னுரை :-**

அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவன் போல அனைத்துத் துறைகளுக்கும் அடிப்படையாக விளங்குவது கணிதமே. அதனால்தான் வள்ளுவர், எண்ணை முதலாகக் கொண்டு,

''எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு''

எனப் பாடியுள்ளார். வளர்ந்துவரும் இன்றைய கணிப்பொறி உலகிற்குள் காலடி எடுத்து வைக்க உயிர்நாடியாகத் திகழ்வது கணிதமே. எல்லா வகையான அறிவியலுக்கும் அடிப்படையான கணிதத்தின் (Queen of Sciences) முற்பட்ட நிலையினை குறிப்பாக வேதகால கணிதத்தையும் அதன் பல்வேறு பயன்பாடுகளையும் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**வேதகால கணிதத்தின் தோற்றம் :-**

வேதகால கணிதம் அல்லது வேதங்களிலிருந்து 16 எளிய சூத்திரங்கள் ''ஜகத்குரு சங்கராச்சார்யா ஸ்ரீ பாரதி கிருஷ்ணா தீர்தாஜி மகராஜா'' என்பவரால் தொகுத்தளிக்கப்பட்டது. கணிதவியலின் பல்வேறு பிரிவுகளான இயற்கணிதம், வடிவியல், திரிகோணமிதி, பகுமுறையியல், வானவியல், நுண்கணிதம் முதலிய பலவற்றிற்கும் ஜகத்குரு அடிப்படை சூத்திரங்களை வகுத்துள்ளார்.

வேதகால சூத்திரங்களை பயன்படுத்தி பல கணக்குகளையும் மிக எளிமையாக செய்யமுடியும். வேதங்களிலிருந்து கணிதத்திற்கு சுவாமிஜி கூறும் இந்த உத்திகள் சாதாரண கணித முறைகளிலிருந்து வேறுபட்டு காணப்படுகிறது.

**பெருக்கலில் வேதகால கணித முறைகள் :-**

வேதகால கணித சூத்திரங்களை பயன்படுத்தி எவ்வளவு பெரிய எண்களாக இருந்தாலும் ஒரு வரியில் பெருக்கி விடையை கண்டுபிடித்து விடலாம். இந்த சூத்திரங்களை பயன்படுத்துவதற்கு எந்தவித மனப்பாட திறமைகளும் மற்றும் வாய்பாடு அட்டவணைகளும் தேவையில்லை. சூத்திரத்தை மட்டும் புரிந்துகொண்டால் போதுமானது.

இளம் மாணவர்கள் கூட இந்த சூத்திரத்தை எளிதில் புரிந்துகொண்டு மிகப் பெரிய எண்களையும் ஒரு வரியில் பெருக்கிவிடலாம். வேதகால பெருக்கல் சூத்திரம் பின்வருமாறு,

— ''NIKHILAM NAVATASCARAMAM DASAJAH''
(''All from 9 and the last from 10''

**செயல்முறை விளக்கம் :-**

## ஓரிலக்க எண்களின் பெருக்கல்.

ஓரிலக்க எண்களின் பெருக்கலில் வேதகால கணித சூத்திரத்தை பயன்படுத்தும் முறைகளைப் பற்றிக் காண்போம்.

எடுத்துக்காட்டாக 9, 4 என்ற எண்களை எடுத்துக்கொள்வோம்.

கொடுக்கப்பட்ட எண்களை இடதுபுறத்தில் மேலும் கீழுமாக எழுதிக் கொள்க

படி :- 1. 9 › 4

கொடுக்கப்பட்ட எண்களுக்கு மிக அருகிலுள்ள 10 அடிமான எண்ணை எடுத்துக்கொள்ள வேண்டும். மேற்கண்ட எண்களுக்கு மிக அருகிலுள்ள 10 அடிமான எண் = 10.

9
4

படி :- 2.

இரு எண்களையும் 10 அடிமான எண்ணிலிருந்து கழித்து விடையை அதனதன் அருகில் வலப்புறத்தில் கழித்தல் குறியிட்டு எழுத வேண்டும்.

9—1
4—6

படி :- 3.

நமது விடையானது வலது, இடது என இரு பகுதிகளைக் கொண்டது. விடையின் இடதுபுற பகுதியை கண்டறிய படத்தில் காட்டியவாறு குறுக்கு கழித்தல் முறையில் முதல் நிரல் முதல் எண்ணில் இருந்து 2வது நிரல் 2ம் எண்ணை அல்லது மறுதலையாக (முதல் நிரல் 2ம் எண்ணிலிருந்து 2ம் நிரல் முதல் எண்) கழிக்க வேண்டும். கழித்துக் கிடைக்கும் மீதியே நமக்கு தேவையான விடையின் இடதுபுற பகுதி ஆகும்.

9—1
↘
4—6
(அல்லது)
9—1
↗
4—6

9—1
↗
4—6
= 3/

விடையின் இடப்பகுதி 3 ஆகும்.

படி :- 4

விடையின் வலதுபுற பகுதியைக் கண்டறிய வலதுபுறமுள்ள இரு எண்களையும் (10 அடிமான எண்ணிலிருந்து கழித்து எழுதியவை) அப்படியே பெருக்கி எழுத வேண்டும்.

9—1
4—6
= 6
(1 × 6 = 6)

படி :- 5

இப்போது வலது, இடது பகுதிகளை சேர்த்து எழுதும்போது நமக்குத் தேவையான விடை கிடைக்கிறது.

9—1
4—6
= 36

## ஈரிலக்க எண்களின் பெருக்கல்.

ஈரிலக்க எண்களைப் பெருக்குவதற்கும் மேலே குறிப்பிட்ட அதே விதிகளைத் தான் பின்பற்ற வேண்டும்.

ஆனால் இங்கு கொடுக்கப்பட்ட இரு எண்களும் 10 அடிமான எண்ணை விட சிறிது அதிகமாகவும், மற்றொன்று குறைவாகவும் இருப்பதாக எடுத்துக்கொள்வோம். இவற்றில் பெருக்கல் சூத்திரங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதைப் பற்றிக் காண்போம்.

நிலை :- 1.

இரு எண்களும் 10 அடிமான எண்ணை விட அதிகமாக இருத்தல்.

எடுத்துக்காட்டாக $17 \times 14$ என்பதை எடுத்துக்கொள்வோம்.

கொடுக்கப்பட்ட இரு எண்களும் 10 அடிமான எண் 10ஐ விட அதிகமாக இருப்பதால் குறுக்குக் கூட்டல் முறையை பின்பற்ற வேண்டும்.

இந்த குறுக்குக் கூட்டல் முறையை ஈரிலக்க எண்களில் மட்டுமல்லாது எங்கு வேண்டுமானாலும் தேவைப்பட்டால் பின்பற்றலாம்.

படி :- 1.

கொடுக்கப்பட்ட எண்களிலிருந்து 10 அடிமான எண்ணை கழித்து அதனதன் விடையை வலப்புறத்தில் கூட்டல் குறியிட்டு எழுத வேண்டும்.

$$\begin{array}{r} 17+7 \\ 14+4 \end{array}$$

படி :- 2.

அருகில் காட்டியவாறு குறுக்கு கூட்டல் முறையை பின்பற்றி விடையின் இடப்பகுதியை அறிய வேண்டும்.

$$\begin{array}{r} 17+7 \\ \nearrow \\ 14+4 \end{array}$$

அல்லது

$$\begin{array}{r} 17+7 \\ \searrow \\ 14+4 \\ \hline =21\phantom{+4} \end{array}$$

படி :- 3.

விடையின் வலப்பகுதியை அறிய வலதுபுறமுள்ள இரு எண்களையும் பெருக்கி எழுத வேண்டும்.

$$\begin{array}{r} 17+7 \\ 14+4 \\ \hline =21/28 \end{array}$$

விடையின் இடதுபுறத்தில் 21 பத்துகளும், 28 ஒன்றுகளும் உள்ளன. எனவே வலப்புறத்தில் உள்ள 28 ஒன்றில், 2 பத்துகளை எடுத்து 21 பத்துகளுடன் கூட்டிக் கொள்ள வேண்டும்.

$$\begin{array}{r} 17+7 \\ 14+4 \\ \hline =238 \end{array}$$

இப்போது நமது விடையானது : $17 \times 14 = 238$ ஆகும்.

நிலை :- 2.

கொடுக்கப்பட்ட எண்களில் ஒன்று அருகிலுள்ள 10 அடிமான எண்ணை விட அதிகமாகவும், மற்றொன்று 10 அடிமான எண்ணை விட குறைவாகவும் இருத்தல்.

எடுத்துக்காட்டாக $64 \times 46$ என்பதை எடுத்துக்கொள்வோம். இரு எண்களும் 10 அடிமான எண் 100ஐ விட வெகுதொலைவில் இருப்பதால் செயல்படுத்தும் அடிமானத்தை 50 என எடுத்துக்கொள்வோம்.

அடிமான எண் $= \frac{100}{2} = 50$

படி :- 1.

64 என்பது 50ஐ விட அதிகமாக இருப்பதால் 64லிருந்து 50ஐ கழித்து கூட்டல் குறியிட்டும், 46ஐ 50லிருந்து கழித்து, கழித்தல் குறியிட்டும் எழுத வேண்டும்.

64 + 14
46 — 4

படி :- 2.

குறுக்கு கழித்தல் அல்லது குறுக்கு கூட்டல் முறையில் விடையின் இடதுபுற பகுதியையும், வலதுபுற எண்களை பெருக்கி வலதுபுற பகுதியையும் எழுத வேண்டும்.

64 + 4
↗
46 — 4
அல்லது
64 + 14
↘
46 + 4
60/—56

படி :- 3.

எடுத்துக்கொண்ட 10 அடிமான எண்ணை 2ஆல் வகுத்தது போலவே விடையின் இடதுபுற பகுதியை 2ஆல் வகுத்து எழுத வேண்டும்.

வலதுபுற பகுதியை 10 அடிமான எண்ணிலிருந்து (100) கழித்து எழுத வேண்டும். மேலும் வலதுபுறத்தில் ஒரு கழித்தல் குறி இருப்பதால் மீண்டும் ஒருமுறை இடதுபுற விடையில் ஒன்றை கழித்து எழுதவேண்டும்.

64 + 14
46 — 4
2)60/—56
30/—56
= 29/44

எனவே நமது பெருக்கல் பலனானது 29 நூறுகளும், 44 ஒன்றுகளும் ஆகும்.

$$64 \times 46 = 2944$$

இவ்வாறு விடையை எளிதில் பெறுகிறோம்.

முக்கிய குறிப்புகள் :-

i) விடையின் வலதுபுற பகுதியின் இலக்கங்கள் நாம் எடுத்துக்கொண்ட 10 அடிமான எண்ணின் இலக்கங்களை விட ஒன்று குறைவாக இருக்க வேண்டும்.

ii) விடையின் வலதுபுற பகுதியின் இலக்கங்கள் மேற்குறிப்பிட்ட வரையறையை விட குறைவாக இருந்தால் பூஜ்ஜியம் சேர்த்து எழுத வேண்டும்.

iii) விடையின் வலதுபுற பகுதியின் இலக்கங்கள் i)ல் குறிப்பிட்ட வரையறையை விட அதிகமாக இருந்தால் சாதாரண பெருக்கலை போலவே இடதுபுற பகுதியின் எண்ணுடன் கூட்டிக்கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டு :-

$$114 \times 996$$

அருகிலுள்ள 10 அடிமான எண் —1000

114—886

996 —004

110/3544

= 113/544

∴ $114 \times 996 = 113544$ என ஒருவரியில் பெறுகிறோம்.

**ஒரே வரியில் பெருக்கலின் விடை :-**

ஓரிலக்க, ஈரிலக்க எண்களை பெருக்குவதைப் போலவே அதிக இலக்கங்களை கொண்ட எண்களை ஒரு வரியில் பெருக்கி விடை காணலாம்.

எடுத்துக்காட்டுகள் :-

i) $87965 \times 99994$

அருகிலுள்ள 10 அடிமான எண் 1,00,000.

87965—12035

99994 —00006

= 87959 / 72210

எனவே,

∴ $87965 \times 99994 = 8795972210$ என்று பெறுகிறோம்.

ii) $999999994 \times 999999993$

999999994—000000006

999999993—000000007

999999987 / 000000042

எனவே,

$999999994 \times 999999993 = 999999987000000042$ என்று கிடைக்கிறது.

**நுண்கணிதத்தில் வேதகால கணித முறைகள் :-**

வேதகால கணித சூத்திரங்கள் வகை நுண்கணிதத்தை மிகவும் எளிமை ஆக்குகின்றன. வேதகால சூத்திரங்கள், ஈருறுப்பு தேற்றம், காரணிபடுத்துதல் வகையிடல், தொடர் வகையிடல், தொடர்காரணிகள் ஆகியவற்றில் பயன்படுகின்றன. வகை நுண்கணிதத்தில் மட்டுமில்லாது தொகை நுண்கணிதத்திலும் வேதகால கணித முறைகள் பயன்படுகின்றன.

**முடிவுரை :-**

வேதகால கணித சூத்திரங்களைப் பார்க்கும் போது கணிதமா? மாயாஜாலமா? என்ற கேள்வி எழுகிறது. வேதகால சூத்திரங்களை புரிந்து கொள்ளாதவரை மாயாஜாலம். புரிந்துகொண்டபின் கணிதமாகும். வேதகால கணிதம் கூறும் எளிய முறைகளை கற்று பயனடைவோமாக!

## எங்கள் கல்லூரி

அருந்தமிழ் போற்றும் தென்பொதிகை மலைத் தொடரிலே
அருள்மிகு சிவசைலநாதர் மணக்கும் நறுங்குறிஞ்சியிலே
எழில்மிகு வளந்தரு கடனாநதிக் கரையினிலே
அருள்தரும் தெய்வம் ஸ்ரீ பரமகல்யாணியின் நல்நாமத்திலே
ஆழ்வார் வாழ்ந்த திருப்பதியாம் ஆழ்வார்குறிச்சியிலே
எழிலென நிமிர்ந்து நிற்கும் இனிய கல்லூரியே
எங்கும் புகழ்மணக்கும் எங்கள் ஸ்ரீ பரமகல்யாணி கல்லூரியே !

## கவிதைத் துளி

ஏன் இந்தப் பிறவி
எண்ணிப் பார் துருவி
இன்னுமா உணர்வில் மறதி
வாழ்வில் எத்தனையோ சுருதி
உள்ளத்துக்கு இல்லையே இறுதி
தெளிவோம் உயர்வு கருதி !

மலரிலே அரும்பு
இளமையிலே குறும்பு
அன்பே கரும்பு
அறமே விரும்பு
உள்ளமே நம்பு
ஊக்கமே மருந்து
வாழ்க்கையே விருந்து

**வை. காசிநாததுரை**
பகுதி நேரத் தமிழ் விரிவுரையாளர்
ஸ்ரீ பரமகல்யாணி கல்லூரி

# மனிதம்

**A. S. அருள் லாரன்ஸ்**
மூன்றாமாண்டு விலங்கியல் துறை

மனிதம் மலர அமைதி தேவை. இன்று நம் உள்ளங்களில், உறைவிடங்களில், நாட்டில், உலகில் அமைதி இல்லை. ஆதலால் பொருட்களுக்கு, உயிர்களுக்கு, உடைமைகளுக்கு சேதம் ஏற்படுகின்றது. அமைதி இருக்கும் இடத்தில் அன்பு, மகிழ்ச்சி, தாழ்ச்சி, சமாதானம், பொறுமை, நீதி, தன்னம்பிக்கை, சகிப்புத்தன்மை ஆகியவை இருக்கும். இவைகளெல்லாம் மனிதத்தின் பரிமாணங்கள். மனிதம் மலரும் போது இவ்வுலகு புனிதத்தை நோக்கி பயணம் மேற்கொள்ளும்.

## மனிதம்

உலகிலுள்ள அனைத்து மனிதர்களையும் சமத்துவ, சகோதரத்துவ உணர்வோடு மனிதனாக மதிப்பதே மனித மாண்பு. தம் உணர்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதை விட, பிறருடைய உணர்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் தருவதும், பிறருடைய கடமைகளை விட தன்னுடைய கடமைகளில் கண்ணும் கருத்துமாய் இருப்பதும் மனித மாண்பு. ''ஆன்மா விளங்குவதற்காக ஒவ்வொரு நாளும் உயிர்களிடம் காட்டும் பரிவே மனிதம்''. என்கிறார் ஞானசம்பந்தன்.

## இன்றைய நிலை

இதுவரை இல்லாத வகையில் 20ம் நூற்றாண்டில் மனிதம் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது என்றால் அது மிகையாகாது. மனித மாண்பு சீர்குலைய தனிமனித எண்ணமானது முக்கிய பங்கு வகிக்கிறது. இதை வள்ளுவம்

''தீப்பால தான் பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்'' என்கிறது.

அதாவது, தமக்கு ஒரு துன்பமும் வரவேண்டாம் என எண்ணுபவன் பிறருக்கு ஏன் தீங்கிழைக்க வேண்டும்? என்று வினவுகிறது.

நல்ல எண்ணம் கொண்டு பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரை துடைக்க முன்வருவோம். நம்மால் இயன்ற உதவிகளை அவர்களுக்கு மனித நேய அடிப்படையில் செய்வோம். மனித நேயத்தின் இன்றைய தேவை பூஜ் மக்களுக்கு நாம் செய்யும் உதவியே!

## மனிதம் குறைய காரணங்கள்

அறிவியலின் அரிய கண்டுபிடிப்புகளால் இந்த உலகு சுருங்கிக் கொண்டே போகிறது. அதனால், சமுதாயத்தில் போட்டியும், பொறாமையும், பகைமையும் அதிகரிக்கின்றது. இவை மனித மாண்பை அழிக்கின்றன.

இன்று எத்தனை பெற்றோர்கள் கலப்புத் திருமணங்களை ஆதரிக்கின்றார்கள்? அவர்களை மீறி செய்துகொண்ட தம்பதியர்களைப் பிரிப்பதற்கு எழுகின்ற, ஏற்படுத்துகின்ற பிரச்சனைகள் தான் எத்தனை? எத்தனை? ஜாதி, சமய, மொழி, இனம், குலம், பதவி, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஆகியவை மனித மாண்பை அழிக்கும் மாபெரும் சக்திகளாகும்.

''கடவுள் உலகில் மனிதனைப் படைத்தார்
மனிதனோ பற்பல கடவுளைப் படைத்தான்!
படைத்தல் தொழிலைப் பார்க்கும் போது
கடவுளை மனிதன் மிஞ்சிவிட்டான்''

மக்கள் பெருக்கம், தகுந்த ஊதியமின்மை, வேலையில்லா திண்டாட்டம், தீண்டாமை போன்றவை மனிதத்தைத் தேடிப் பிடிக்கச் செய்கின்றன. வரதட்சணைக் கொடுமை, பெண்ணடிமை போன்ற சக்திகளெல்லாம் மனிதத்தை சின்னாபின்னாமாக்க எழுந்ததே!

இன்று மனிதத்திற்காக உழைக்கும் மனிதர்களை ஏற்றுக்கொண்டு அவர்களை ஆதரிக்கும் கரங்கள் உள்ளனவா? மனிதத்தை நிலைப்படுத்த எழுந்த மாமேதைகளான இயேசு, புத்தர், காந்தி ஆகியோரின் நிலைதான் என்ன? அவர்களை ஏற்றுக்கொண்டோர் எத்தனை பேர்? மனிதத்தை உயர்த்த உழைத்த அன்னை தெரசாவிற்கு, எச்சில் கூட பரிசிலாக உமிழப்பட்டுள்ளது.

''உயிருள்ள மனிதர்களின் துயரைத் துடைக்காதோர்
உயிரற்ற கற்சிலைகளுக்காக உயிரை விடுவதேன்?
உயிருள்ள போது கருத்தைப் புறக்கணிப்போர்
உயிரிழந்த பின் அவரது சிலைகளை வருணிப்பதேன்?''

## மனிதத்தை வலுப்படுத்த

இந்த 21ம் நூற்றாண்டில் வன்முறையை வழியனுப்பும் முகமாக, அறிவியல் கண்டுபிடிப்புகளை ஆக்கத்திற்கு பயன்படுத்துவோம். மகாத்மா சொன்னது போல நாம் பார்ப்பவை, கேட்பவை, பேசுபவையெல்லாம் நல்லதாகட்டும். மனித மாண்பைக் குலைக்கும் காரணிகளை அழித்து நாளை மலரும் புத்துலகிற்கு உரமாக்குவோம்.

பகுத்தறிவற்ற விலங்குகளான, நாயிடமுள்ள நன்றியும், புறாவிடமுள்ள கபடமற்ற பண்பும், பாம்பிடமுள்ள விவேகமும், காகத்திடமுள்ள பகிர்வும், எறும்பிடம் உள்ள சுறசுறுப்பும், தேனியிடமுள்ள ஒற்றுமையும் நம்மிடம் உள்ளதா? சிந்திப்போம். பகுத்தறிவுள்ள மனிதர்களாக நடப்போம். நிறத்தால் வேறுபட்ட மலர்களைப் போல, மதங்களால் வேறுபட்ட மனிதத்தை எழில்மிகு தோட்டம் எனும் உறவால் இணைப்போம் ''எம்மதமும் சம்மதம்'' என்று வாழ்வோம். ஜாதிகளின் கௌரவ நிறத்தை கற்சிலைகளுக்கு தீட்டி பாரத மண்ணை சிவப்பாக்காமல், உள்ளங்களை உயர்த்தி விடியலை காணுவோம்.

சாதி பற்றி கவிமணி கூறுகையில்,

‘‘ஓடும் உதிரத்தில் -- வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் — சாதி
தெரிவது உண்டோ?’’ என்கிறார்.

## புதியதொரு உலகு செய்வோம்

இளைஞனே விழித்தெழு! வருங்காலம் உன் கையில்! அதை அப்படியே நசுக்கி கொன்றுவிடாதே! சுதந்திரம் கொடுத்து வாழவிடு! வளரவிடு! நீயே வருங்கால மானிட சூரியன்! ஒளி வீசு! தன்னம்பிக்கை கொள்.

‘யாதும் ஊரே! யாவரும் கேளீர்’ என்று மொழிந்த சூரியனின் வார்த்தைகளுக்கு ஏற்ப புத்துலகு படைப்போம். இனி,

‘‘இந்துவே திரண்டு வா என்றோ
கிறிஸ்தவனே திரண்டு வா என்றோ
இஸ்லாமியனே திரண்டு வா என்றோ
எழுப்பாதீர்கள் முழக்கத்தை’’ மாறாக
‘‘மனிதனே இணைந்து வா என்று முழங்கி
மானிடத்தை இனியேனும் மகத்துவப்படுத்துவோம்’’.

நம் உலகு அன்பும், அமைதியும் ஆளும், உண்மை, நீதி உறையும், உறவின் சமூகம்; தாழ்ந்தோரும், வீழ்ந்தோரும் உயர்ந்து உரிமைகள் இழந்தோர் இணையும் சமூகம்; நேர்மை, தூய்மை, வாய்மை கொண்டு வாழ்வு பயணத்தைத் தொடருவோம். ‘‘அன்பே அனைத்தும்’’ என்ற கீதத்தை இசைத்து மத, இன, சாதியின் அடிமைகள் நாமில்லை என்பதை உணர்த்தி மனிதம் உயர்த்துவோம்.

வாழ்க வையகம்! வளர்க மனித மாண்பு!!

# Friends and Friendship

**V. VENKATESH**
III B.Sc., Chemistry

**F**or you, the
**R**ight person
**I**n this world
**E**xcept your relative, who
**N**ever hesitates in
**D**oing what ever you say.

- A human being is said to be the unluckiest person when he/she does not get a friend.
- If you have no friends, it is a sign that Fortune has forgotton you.
- Never be a friend to one who doesn't even bother you.
- Sacrifice anything for friendship But do not
  Sacrifice frindship for anything
- False friendship is worst than bitter enemity.
- You can share happiness and the other side with your friend very frankly.
- Friendship can raise you upto your Zenith
  It can also put you in trench.
- Friend is the real index of your mind.
- Friendship between two only last long.

# EXPOSURE

Life is flooded with competitions in this fast moving world. For competing with, you need to moil and toil. It will be made easy when you expose yourself to the outside. Exposure is nothing but a way to represent yourself in some field or the other. Exposure brings out the talents of a man or women. It will help to reach greater heights in your life. Also you interact with different kinds of people which will help you to adopt yourself at any place. Exposure will give independent thoughts. This will help to tackle any Problem at any time. So expose yourself when you get chance.

From

Mr. Alkali Metals,
ns, s-Block
Mendeleef Street,
Inorganic City,
Chemistry State.

To

Mr. Halogens
$ns^2$, $np^5$, P-Block,
Mendeleef Street,
Inorganic City,
Chemistry State.

Dear Halogen,

I am stable, How is your stability? When I paid a plain Visit with all my family members to your P-Block on the last Sunday, I come to know that one of your daughters Ms. Chlorine is in love with one of my Sons, Mr. Sodium. I too like your daughter Ms. Chlorine who is very shrewd and quick to react, like my son Mr. Sodium. I think it is good for us to give our consent for their union.

You need not worry of the character of Mr. Sodium. He is an optimist and is so perfect in all actions. He is an eminent personality in our chemical world. You know, he is the chairman of metal committee If you have any doubt of his Physical or chemical character, you can make inquiry to Mr. Kerosine oil or Mr. Water or Mr. Water or Ms. Mercury who knows him well.

Love is blind so it can't see the colour of the skin but can only see the content of the character. So you need not worry of the silvery white colour of sodium or greenish yellow colour of chlorine. This segregation of their colour never allows their seperation.

I hope the union of sodium and chlorine that is sodium chloride will be a stable one. They will be more happy and be the best couple. Their bond (Ionic bond) will be the best bond in our chemical world.

So far I have expressed my humble wishes for the happy union of Mr. Sodium and Ms. Chlorine. Now I am eagerly waiting for your positive reply which will end, in their marriage with the assistance and blessings of all our family members in our Laboratory.

Yours Sensitively,
Mr. Alkali Metals

S. Meenakshi Sundaram
II B.Sc. Chemistry

# Confessions of an English Teacher

V. Renganayaki
Dept. of English

Torn between learners
of 40 marks motivation
and the work platform
highly prejudiced
the English teacher suspends
willingly
his/her work ethics
sunerdering his/her English self
to
survival
but ......
preparing himself/herself for
pay incentives
participating in programmes
and learning more how
to teach English
pockets and handbags
full of certificates
service register
full of entries and entries
and ...
paying his tax dues
availing loans as per the
demands at home
tea at intervals
neither with voice active
nor passive
neither with speech direct
nor indirect
positioning himself/herself
at the mercy of the
policy makers
posing for political canstraints
he
she
too
lives
with words unspoken
unheard
but
keeps on repeating famous lines
of Shakespeares and Wordsworths
"To teach
or
not to teach
English
thro' English
and that is the Question !"

# Sound Sense of Values 12 Reminders

R. Gayathri
II B.Sc. (Physics)

1) The value of time
2) The success of perseverance
3) The pleasure of working
4) The dignity of simplicity
5) The worth of character
6) The power of kindness
7) The influence of example
8) The obligation of duty
9) The wisdom of economy
10) The improvement of talent
11) The virtue of patience
12) The joy of originality

## Think of Three

Three things to maintain
Promise, Friendship & Affection
Three things to love
Purity, Honesty & Hardwork
Three things to control
Speech, Behaviour & Action

# ENERGY SITUATION IN INDIA

T. Subramanian
III B.Sc., Chemistry

## Introduction

India is the seventh largest country in the world (areas) 328 millions sq km) but the per capita energy consumption is only 1/5 th of the world average. The energy consumption in rual areas is 1/10th of the commercial Energy consumption 74 percent of villages are Electrifield but only 15 percent of the rural house holds are using electricity However consumption of Electricity in these country has been growing at the rate of 10 percent per annum compounded over the last 30 years. The increase in the installed generation capacity has not matched with the demand rate. In such difficult situations it is essential to tap other sources of energy

The department of non-conventional energy sources(DNES) was set up in 1982 which formulates policies and programmes for the research and developmental activities in new and renewable sources of energy and their Implementation

The alternative sources of energy are 1. Solar energy 2. Biomass 3. Biogas 4. Wind 5. wave 6. Tide 7. Ocean thermal conversion energy 8. Geothermal 9. Nuclear Fission.

The renewable sources of energy or the alternative sources of energy which can save us from the energy crisis

## 1. Solar energy

The sun is almost inexhaustible source of energy. Suns heat energy is used directly in solar cookers to cook foods or in solar heaters to heat water.

A solar energy centre has been set up at Gurgaon Haryana, A central photo voltaic power system has been installed at Ghaziabed to provide power for street lights, community TV and Radio sets

National physical laboratory, Delhi has developed a solar water pump at 1 kw rating called Abhimanyu. solar refrigeraters and solar milk cookers have been desinged by REC, Kurukshetra

.

*The important uses of solar energy.*

1. Solar energy is used for cooking food. This is done by using solar heaters.
2. solar energy is used for producing electricity needed in space sattelites and to run watches and calculaters. This is done by using solar cells. These cells can convert the solar energy directly into electricity.
3. solar energy is used for the production of large scale electricity in solar power plants
4. solar energy is used to melt and forge metals in solar furnaces.

## 2. Water biomass energy

Biomass is the waste material of living objects. It includes cattle dung, wood, sewage, agricultural wastes or crop residues like bagasse or rice hausk, which on fermentation in the absence of air gives rise to a combustible gas called biogas. This can be developed as a good source of energy biogas is a mixture of gases such as methane, carbon dioxide, hydrogen and hydrogen sulphide.

*uses of biogas*

Biogas is used for cooking food when biogas is burned in a gas stove it produces lot of heat This heat finds use for cooking food and for other domestic heating purposes, because of

a. Biogas burns without smoke and does not cause air pollution.
b. Biogas is having a high calorific value (ie) It produces large amount of heat per unit mass
c. It is a very clean fuel and covnenient to use
d. As it is supplied by pipes, there is no storage problem supplied from the gas plant
e. It is cheaper than most common fuels

### 3. Sea- wave energy

The wave on the surface of sea move very rapidlly and have a lot of kinetic energy. The energy of moving sea waves is now being used to generate electricity specially shaped devices have been designed which this movement can be used to drive dynamos to generate electricity.

Basically there are three ways of generating power from the high seas

1. Taming the waves (wave energy)
2. Hardness the tidal power (tide energy)
3. using the difference in temperature between the layers of the ocean

### 4. Tidal energy

The enormous movement of water round the world's coasts between high and low tides provides a very large source of energy. This energy can be tapped by constructing a tidal barrage. The difference in depth of water on either side of the barrage is being used to drive turbines and produce electricity.

### 5. Wind energy

Newer type of windmills are being developed which could be a good source of energy in exposed, windy places

Uses

1. The energy of wind is used to propel the sail boats in rivers and sea to transport men and materials from one place to another.
2. The energy of wind is used through wind- mills to run pumps to draw water from the ground.
3. The energy of wind is used to run flour-mills to grinds the grains like wheat and corn into flour.
4. These days wind energy is being used to generate electricity. This is done as follows. The wind rotates the wind mill blades . When the blade rotate, they turn the coil of an electric generator to produce electricity.

### 6. Nuclear fusion energy

All the existing nuclear power stations are based on the nuclear fission principle, the source of energy being the fission of radioactive substances such as uranium 235 But the supply of uranium 235 is limited and hence cannot lost for a long time to come.

Conclusion:

Thus energy is produced by different ways. Energy conservation is important. So we should try to prevent the energy from being wasted uselessly this can be done everywhere in home, in colleges, in schools and in industry etc. We should take a great care in using the fossil fuels, like coal, petroleum products (like petrol, kerosene and diesel) and natural gas. These should be conserved as far as possible and used.



கல்லூரிக் கட்டிடங்களின் கம்பீரத் தோற்றம்

